# திருமலைத்தீபம்

தீபம் – 76 Dec - 2021 / Jan - 2022 Email : theepamlink@gmail.com TP: 026 2221022/ 026 2054362 Rs. 30/=


## திருகோணமலை ஆயரின் நத்தார் செய்தி...



இயேசுவில் என் அன்புச் சகோதரமே!

மார்கழி மாதம் என்றாலே பல்வகை உற்சாகத்தைத் தரக்கூடிய மாதமாக கணிக்கப்படுகின்றது. பலருக்கு விடுமுறைக் காலம், வியாபாரிகளுக்கு வருமானத்தைப் பெருக்கும் காலம், உறவுகளுக்கு நன்கொடைகள் பகிர்ந்து உறவுகளைப் புதுப்பிக்கும் காலம், இல்லத்தரிசிகளுக்கு சந்தர்ப்பம் பார்த்து கழிவு விலையில் பொருட்களை வாங்கும் காலமிது. ஆனால் இவ்வருடம் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டங்கள் வெறும் கேள்விக்குறியாகவே உள்ளது. கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக மீண்டும் பயணத்தடை அல்லது திருப்பலியில் பங்கேற்போரின் எண்ணிக்கையில் கட்டுப்பாடு எனும் குழப்பத்தில் நாம் இருக்க; அண்மைக்காலங்களில் இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளால் பொருளாதார சிக்கலில் பாமர மக்கள் மூழ்கியிருக்க வழமையான கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டங்கள் சந்தேகமாகவே உள்ளன.

கிறிஸ்தவர் நாம் எச்சூழலிலும் ஆன்மீக புதுப்பித்தலில் தெளிவாகவே இருக்க வேண்டும். திருவருகைக் கால வழிபாடுகள் இதற்கு உதவியாக அமைந்துள்ளன. பங்குகளில் ஞாயிறு தின வழிபாடுகள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் பலவகையில் எம் உள்ளங்களைப் புதுப்பிக்க உதவியாக உள்ளன.

கிறிஸ்து பிறப்பு திருப்பலி, ஒளிவிழா நிகழ்ச்சிகள், கரோல் கீதங்கள் மனதுக்கு நெகிழ்ச்சியைத் தருகின்றன. ஆனால் பல சவால்களுக்கு மத்தியில் கிறிஸ்து பிறப்பை நாம் எவ்வளவிற்கு அர்த்தமுள்ளதாக்கலாம்? கிறிஸ்து பிறப்பில் அன்றும் இன்றும் எமக்குக் கொடுக்கப்படும் செய்தி தெளிவாகவே உள்ளது.

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!
உலகில் அவருக்கு உகந்தோருக்கு
அமைதி உண்டாகுக!"

ஆண்டவருக்கு உகந்தோராக வாழ்வோர் இவ்வுலக வாழ்வில் பல இன்னல்களை அனுபவித்தாலும் ஆண்டவர் தரும் அமைதியைக் கொண்டிருப்பர் என்பது உண்மை. இச்செய்தி எம்மையும் நாம் சந்திப்போரையும் நம்பிக்கையில் வளர்க்க வேண்டும். இறைமகனின் பிரசன்னம் அன்று யோசேப்புவையும் மரியாவையும் துணிந்து செயல்பட வைத்தது. இடையர், ஞானிகள் வந்து வணங்கி தம் அனுபவங்களைப் பகிர்ந்தபோது அவற்றைப்பற்றி வியந்து தியானித்தனர். அதேபோல ஆபத்துகள் வந்த வேளையில் துணிந்து செயல்பட்டனர். இதுவே இவர்களது நம்பிக்கை வாழ்வு. தம் பெயரைப் பதிவு செய்ய வேண்டுமென்பது அரச கட்டளை. மரியா நிறைமாதக் கர்ப்பிணியாக என்னால் பயணிக்க முடியாது எனக்கூறி நாசரேத்தில் இருந்திருக்கலாம். ஆனால் இறைமகன் தாவீதின் ஊராகிய பெத்லகேமில் பிறப்பார் என்பது இறைவாக்கு. அந்த இறைவாக்கு நிறைவேற வேண்டுமெனும் வைராக்கியத்தில் மரியா யோசேப்புடன் எருசலேம் நோக்கிப் பயணித்தார். கரடுமுரடான பாதை, ஒற்றையடிப் பாதை – எதுவும் மரியாவுக்குத் தடையாக வரவில்லை. கழுதையில் அமர்ந்து பயணித்தாலும் நேரத்திற்கு நேரம் அதிலிருந்து இறங்கி நடக்கவும் வேண்டும். கடமை, பொறுப்பு, இறைத்திட்டத்திற்கு இசைவாக செயல்படுதல் இவருக்கும் முன்னுரிமையாக இருந்தது. ஆண்டவரும் அவர்களை வழிநடத்தி பாதுகாத்து ஆசீர்வதித்தார்.

இதே மனநிலை கிறிஸ்தவர் எம்வாழ்விலும் இருக்க வேண்டும். வாழ்வின் சவால்கள் மத்தியிலும் நாம் நம்பிக்கை இழந்துவிடாமல் செயல்பட்டு அடுத்தவர்க்கும் நம்பிக்கைக் கீற்றுகளாக வாழவேண்டும். இலங்கை நாட்டில் அண்மைக் காலமாக நடைபெறும் வாழ்வியல் பிரச்சினைகளை மையமாக வைத்து இலங்கை ஆயர் பேரவையால் சிறப்புச் சுற்றுமடல் இம்மாதம் வெளியிடப்படும். பாஸ்கா குண்டுவெடிப்பு மக்கள் மத்தியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக தீர்க்கமான செயல்பாடுகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. அது ஒருபுறம் இருக்க வடகிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தீர்வோ, நியாயமோ கிடைக்காமல் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். தனக்குரிய நேரம் ஒன்று உண்டு என்பதையும் இறைவன் காலத்திற்குக் காலம் பாதிப்பை ஏற்படுத்துவோருக்கு வெளிப்படுத்திய வண்ணமே இருக்கிறார். பழிவாங்குதல் என்பது எமக்குரியதல்ல என்பதை கிறிஸ்தவர் நாம் உணர்ந்து மன்னிப்பின், ஒப்புரவின், அமைதியின் மக்களாக வாழ்ந்து சான்று பகர வேண்டும்.

இக்காலம் எமக்கு அமைதியின் காலமாக விளங்கட்டும். அமைதியின் மன்னர் இயேசு எம் உள்ளங்களையும் வாழ்வையும் ஆட்சி செய்யட்டும். ஆயர்கள் மாமன்ற ஆயத்தங்களும் செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு டிசம்பர் மாதம் பல ஆயத்தக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் மக்கள் ஒன்றுகூடல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இவற்றை ஜனவரி மாதம் பிற்போட்டுள்ளோம். உரிய நிகழ்ச்சிகள் பங்குத் தந்தையூடாக பொதுநிலை நம்பிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் அமைதி நிறைந்த கிறிஸ்து பிறப்புப் பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாலகன் இயேசு உங்கள் உள்ளங்களையும் இல்லங்களையும் ஆசீர்வதிப்பாராக.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

HAPPY BIRTHDAY!

வாசகர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள், எழுத்தாளர்கள், அனைவருக்கும் திருமலைத்தீபத்தின் நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

மார்கழி 17

திருத்தந்தை பிரான்சிஸ்



உதிராத சூரியனாய்..
உலகிற்கு ஒளிவீச..
உங்களைப் பூமிக்கு பரிசளித்த
இந்நாளில் எம்மறைமாநிலம்
மகிழ்ந்து சொல்கிறது.

"Happy Birthday"...!

மார்கழி 09
பிறந்தநாள்
மார்கழி 20
குருத்துவ நினைவு நாள்.



பேரருட்திரு
ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை

குறையற்ற குணத்தோடும்,
குறையாத அன்போடும்,
குறையில்லா பண்போடும்,
நிறைவாக நீங்கள் வாழ்ந்திட வேண்டுமென
வாழ்த்துகின்றோம்!

மார்கழி 25

Happy Birthday

பேரருட்திரு
கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை




நீங்கள் கண்ட கனவுகள்
ஒவ்வொன்றாக நிறைவேற
இந்த நல்ல நாளில்
மனமார
வாழ்த்துகின்றோம்!

இனிய பிறந்தநாள்
வாழ்த்துக்கள்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16வது பொது ஆயர்கள் மாமன்ற சாதாரண ஒன்றுகூடல்
## அக்டோபர் 2021 – அக்டோபர் 2023 வரை



### திருகோணமலை மறைமாவட்டத்தில், "ஆயர்கள் மாமன்றம் ஓர் அறிமுகம்"

08.01.2022 – மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவிகளுக்கான அறிமுகம்
14.01.2022 – சிங்கள மொழிபேசும் பொதுநிலையினருக்கான அறிமுகம்
15.01.2022 – மூதூர் மறைக்கோட்ட பங்குகளுக்கான அறிமுகம் (தமிழ்)
22.01.2022 – நிலாவெளி மறைக்கோட்ட பங்குகளுக்கான அறிமுகம் (தமிழ்)
29.01.2022 – திருகோணமலை மறைக்கோட்ட பங்குகளுக்கான அறிமுகம் (தமிழ்)

## செயல்பாடுடன் கூடிய ஒருமைப்பாட்டிற்கு அழைக்கும் ஆயர்கள்

போலந்து மற்றும் பெலாருஸ் நாடுகளின் எல்லையில் புலம்பெயர்ந்தோர் மற்றும் புகலிடம் தேடுவோர் பெரும் நெருக்கடிகளை சந்தித்துவரும் சூழலில் ஐரோப்பிய நாடுகளும் நல்மனதுடையோரும் துயருறும் இம்மக்களுடன் செயல்பாடுடன் கூடிய ஒருமைப்பாட்டை வழங்கவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளது ஐரோப்பிய ஆயர் பேரவைகளின் ஒருங்கிணைப்பு

புலம்பெயர்ந்தோர் அடைந்துவரும் பெரும் நெருக்கடி ஏற்படுத்தியுள்ள இழப்புகள் குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிடும் ஐரோப்பிய ஆயர்கள் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்காக செபிக்குமாறு அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். போலந்து லித்துவேனியா மற்றும் பெலாருஸ் நாடுகளிடையே எல்லைப் பகுதிகளில் தடுக்கப்பட்டுள்ள புலம்பெயர்ந்தோரின் மாண்பும், அடிப்படை உரிமைகளும் மதிக்கப்படுவதை உறுதிசெய்ய ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் முன்வரவேண்டும் என அழைப்புவிடுத்துள்ளனர் ஆயர்கள்.

சமூக பொருளாதார வாய்ப்புகள் இன்மை, போர், வன்முறை ஆகிய காரணங்களுக்காக தங்கள் சொந்த நாட்டைவிட்டு வெளியேறும் மக்கள் அவர்கள் அடைக்கலம் தேடிவரும் நாடுகளில் எல்லையிலேயே இறக்கும் அவலம் தடுக்கப்படவேண்டும் என ஆயர்கள் ஐரோப்பிய அரசியல் தலைவர்களிடம் மேலும் விண்ணப்பித்துள்ளனர். இதற்கிடையே பெலாருஸ், போலந்து, லித்துவேனியா ஆகிய நாடுகளின் எல்லைகளில் அடைக்கலம் தேடியுள்ள ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோருக்கு தங்குமிடம், மருத்துவ வசதி, புகலிடம் கோருவதற்கான உரிமைகள் போன்ற அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுவதாக கவலையை வெளியிட்டுள்ளது ஐரோப்பாவின் கத்தோலிக்க காரித்தாஸ் நிறுவனம்.

ஐரோப்பாவுக்குள் அடைக்கலம் தேட முயன்ற ஆயிரக்கணக்கான மக்கள் பெலாருஸ் மற்றும் போலந்து நாடுகளின் எல்லையில் கடுங்குளிரில் வாடிவருவதாகக் கூறும் காரித்தாஸ் அமைப்பு பல குடும்பங்கள் இளம் குழந்தைகளுடன் துயர்களை அனுபவித்து வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளது. போலந்துக்கும் லித்துவேனியாவுக்கும் இடையே புகலிடம் தேடும் முயற்சியில் துன்புற்றுவரும் மக்களுக்கு அனைத்து மனிதாபிமான உதவிகளையும் ஆற்றிவருகின்றது கத்தோலிக்க காரித்தாஸ் அமைப்பு.

## மகிழ்வின் மந்திரம் திருஅவை, சுங்கச்சாவடியல்ல



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "அன்பின் மகிழ்வு" திருத்தூது அறிவுரை மடலின் 8ம் பிரிவில் "மேய்ப்புப்பணி கருணையின் அறிவுசார் விளக்கம்" என்ற துணைத்தலைப்பில் 310ம் பந்தியில் கூறியிருப்பதன் தொடுக்கு இதோ "இரக்கம் என்பது இறைவனின் செயல்பாடு மட்டுமல்ல அவரது உண்மையான குழந்தைகள் யார்? என்பதை அறிய இது ஒரு அளவுகோலுமாகும். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் கருணை முதலில் நமக்குக் காட்டப்பட்டதால் நாமும் கருணை காட்ட அழைக்கப்படுகிறோம்." என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இது ஒரு கற்பனைக் கதையோ இறையன்பிற்கு நாம் மேலோட்டமாக வழங்கும் பதிலுரையோ அல்ல. எது உயர்வானதோ அதையே இறையன்பு நமக்கு வழங்குகிறது. ஏனெனில் திருஅவை வாழ்வின் அடிப்படையே இரக்கம் தான் திருஅவையின் மேய்ப்புப்பணி நடவடிக்கைகள் அனைத்தும் திருஅவை நம்பிக்கையாளர் மீது காட்டும் கனவான மென்மை நடவடிக்கைகளால் நிறைந்திருக்க வேண்டும். இரக்கம் குறைபட்டதாக திருஅவையின் போதனைகளோ இவ்வுலகிற்குரிய அதன் சான்று வாழ்வோ இருத்தலாகாது. ஆனால் நாம் பலவேளைகளில் அருளை வழங்க உதவும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்படுவதற்கு பதிலாக அருளின் நடுவர்களாக செயல்படுகிறோம். திருஅவை என்பது ஒரு சுங்கச்சாவடி அல்ல மாறாக அது நம் இறைதந்தையின் இல்லம் அங்கு அனைவருக்கும் தங்கள் பிரச்சனைகளுடன் வரும் அனைத்து மக்களுக்கும் இடமுண்டு.

## பழைய பாயில் அமர்ந்துகொண்டு புதியதை தயாரிக்கிறோம்

'பழைய பாயில் அமர்ந்துகொண்டு புதிய பாய் ஒன்றைத் தயாரிக்கிறோம்' என்ற ஆபிரிக்க முதுமொழிக்கேற்ப அக்கண்டத்தின் கலாச்சாரங்கள் அமைந்துள்ளன என்றும் இன்றைய உலகம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளுக்கு ஆபிரிக்க கலாச்சாரங்கள் சில நேரங்களில் போதிய பதிலிருப்புக்களைக் காணமுடியும் என்றும் ஆபிரிக்க மறைபோதக சபையின் அருள்பணியாளர் ஒருவர் பீதேஸ் செய்தியிடம் கூறினார். கிளாஸ்கோவில் நடைபெற்றுவரும் COP 26 காலநிலை உலக உச்சி மாநாட்டையொட்டி பீதேஸ் செய்திக்குப் பேட்டியளித்த ஆபிரிக்க மறைபோதக சபையின் ஐவரி கோஸ்ட் நாட்டின் மறைப்பணியாளர் அருள்பணி Donald Zagore அவர்கள் இவ்வாறு கூறினார்.

காலநிலை உலக மாநாட்டில் இடம்பெற்றுவரும் நிகழ்வுகள் பற்றிய தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட அருள்பணி Zagore அவர்கள் வழமையான ஆபிரிக்க கலாச்சாரங்களில் ஒன்றாக இருப்பது காடுகள் பாதுகாப்பு பற்றிய கல்வி எனவும் அக்கல்வியில் காடுகளைப் புனிதமாகப் போற்ற வேண்டும் என்பது பற்றி கற்றுத்தரப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

காடுகளின் புனிதம் பற்றிய வரலாறு ஒரு புராணத்தை அல்ல மாறாக அது ஓர் உண்மையான கலாச்சாரக் கலை என்றும் அதனைப் பாதுகாப்பதற்கு நன்னெறிப்படி நோக்கம் உள்ளது என்று கூறிய மறைப்பணியாளர் அருள்பணி Zagore அவர்கள், அவர்கள் காடுகள் ஒரு புனிதத்தலம் அதனை மிகுந்த மரியாதை மற்றும் அன்போடு நடத்தவேண்டும் என ஆபிரிக்க கலாச்சாரத்தில் கற்றுத்தரப்படுகின்றது என்று கூறினார்.

ஐரோப்பிய கலாச்சாரத்திலும் அதன் மெய்யியல் கலை வழியாக காடுகளின் மதிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் Chateaubriand என்ற கலைஞர் காட்டை இறைமையின் ஆலயம் என்று குறிப்பிட்டுள்ளார் எனக் கூறிய அருள்பணி Zagore அவர்கள் 100க்கும் மேற்பட்ட நாடுகள் கலந்துகொள்ளும் COP 26 உலக மாநாட்டில் இயற்கையின் குறிப்பாக காடுகளின் புனிதம் மதிக்கப்படுவதற்கு வலியுறுத்தப்பட வேண்டும் என்று கூறினார்.

**இம்மாத மேற்கோள்கள் நெல்சன் மண்டேலாவின் சிந்தனைகளிலிருந்து!**

"காலத்தின் மதிப்புத் தெரிந்தால் தான் உனக்கு வாழ்வின் மதிப்பு தெரியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அமைதியின் அரசர் பிறக்கட்டும்'

அன்பார்ந்த வாசகப்பெருமக்களே வணக்கம்!
போர்கள் ஓய்ந்து விட்டது நம் நாட்டில் அமைதி திரும்பிவிட்டது.
இனி யுத்தம் இல்லை, ஆயுதங்களின் தேவைகள் இல்லை,
போர்விமானங்களின் இரைச்சல் இல்லை என்று சில வருடங்களின் முன்
மார்தட்டிக்கொண்ட தலைவர்களின் மத்தியில் மக்களாக நாங்களும்
கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம்
இனி எங்கள் மத்தியில் அமைதியின் நிறைவு இருக்கும் என்று நம்பினோம்.
ஆனால்,
குண்டுகள் வெடிக்காத குறையைப் போக்கவோ என்னமோ
எம் தேசத்தில் குண்டுகளைத் தவிர ஏனைய அனைத்தும் வெடிக்கின்றன!
Gas சிலிண்டர்கள் வெடிக்கின்றன;
திரவப்பசளை கொல்கலன்கள் வெடிக்கின்றன;
பொருட்களின் விலைகளும் உயர்ந்து வெடிக்கின்றன.
பொருளாதாரப் பிரச்சனையில் குடும்பங்கள் வெடிக்கின்றன;
அவற்றோடு,
எதிர்கால வளர்ச்சிக்கான கனவுகளும் வெடிக்கின்றன;
இளம் சமுதாயத்தின் கல்வியும், வாழ்க்கையும் வெடிக்கின்றன.
இதனால் இலங்கையில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனும்
வெளியே தெரியமால் உள்ளே வெடித்து சிதறிக் கொண்டிருக்கின்றான்/ள்

இப்படிப் பல வெடிப்புக்களின் மத்தியில்தான்
இந்த 2021 நத்தார் விழாவையும்
2022ம் ஆண்டின் முதல் விடியலையும் வரவேற்கக் காத்திருக்கின்றோம்.

இது வெறும் காத்திருப்பல்ல
"மெசியா வந்து எல்லாவற்றையும் மாற்றியமைக்க மாட்டாரா?"
என்ற இஸ்ரயேல் மக்களிடமிருந்த ஏக்கத்துடன் கூடிய எதிர்பார்ப்பு!
கிறிஸ்து பிறப்பு விழா என்றதும்,
"நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளார், அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர்,
வலிமை மிகு இறைவன் என்றுமுள தந்தை அமைதியின் அரசர்" (எசாயா 9.6)
என்ற அவரின் அடையாளத்தை நிஜவாழ்வில் காண வேண்டும் என்பதும்;
"இத்தகைய அவர் பெயர் என்றென்றும் நிலைத்திருப்பதாக!
கதிரவன் உள்ளவரையில் அவர் பெயர் நிலைத்திருப்பதாக!" (தி.பா 72.17)
என்று அவர் கொணரும் அமைதி
எங்கள் எல்லோருடனும் நிலைத்திருக்க வேண்டும் என்பதும்தான்.
2021 கிறிஸ்து பிறப்பு விழாவிலும் 2022 புத்தாண்டின் தொடக்கத்திலும்
இலங்கையர் அனைவரின் செபமாகவும் ஏக்கமாகவும் இருக்கிறது.

மீண்டும்
எகிப்திய அடிமைத்தன வாழ்வை
பாபிலோன் அடக்குமுறை நாட்களை
உரோமைய கொலைவெறி உணர்வுகளை
நாம் எல்லோரும் அனுபவிக்கத் தொடங்கியிருக்கும் இந்நாட்களில்
கடவுளின் மெசியா வருவாராக
"எளியோரின் மக்களுக்க அவர் நீதி வழங்குவாராக!
ஏழைகளின் பிள்ளைகளைக் காப்பாராக
பிறரை ஒடுக்குவோரை நொறுக்கி விடுவாராக! (தி.பா 72.4)
என்ற திருப்பாடலைப் பாடி 2022ம் ஆண்டினை நம்பிக்கையோடு இறைவனிடம்
ஒப்புக்கொடுப்போம்
அமைதியின் அரசர்
நம் இல்லங்களிலும், நம் திருஅவையிலும், நம் தேசத்திலும்
பிறக்கட்டும் வாழட்டும்
அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

ஆசிரியர்!



## படித்ததில் பிடித்தது

## துரிதம்



கோழிக் கடை. பிராய்லர் கோழியும் நாட்டுக் கோழியும் நலம் விசாரித்துக் கொண்டன.

பிராய்லர் கேட்டது:
'மக்கள் ஏன் நாட்டுக் கோழி... நாட்டுக் கோழி என்று உன்னையே நாடுகிறார்கள்? இரு மடங்கு விலை கொடுக்கிறார்கள். அப்படி என்ன என்னிடம் இல்லாதது உன்னிடம் இருக்கிறது?'

நாட்டுக் கோழி சொன்னது:
'உன்னை ஒரே இடத்தில் உட்கார வைத்து தீனி போடுகிறார்கள்.
நீ குண்டாக வேண்டுமென்றே ஊசி போடுகிறார்கள்.
நீயும் இருந்த இடத்திலேயே பெருத்துப் போகிறாய்.
அது தான்... உனக்கும் கொழுப்பு. உன்னைத் திண்பவருக்கும் கொழுப்பு."

தொடர்ந்தது:
'ஆனால் நான் உன்னைப் போல் இல்லை. என் உணவை நானே தேடி அங்கும் இங்கும் அலைகிறேன். இயல்பாக வளர்கிறேன். எனவே எனக்குக் கொழுப்பு குறைவு. மதிப்பு அதிகம்."

பிராய்லர் கேட்டது:
'எனக்கும் மதிப்பு வர என்ன செய்யவேண்டும்?'

நாட்டுக் கோழி சொன்னது:
'ஓடியாடி உழைத்துப் பார்.
கொழுப்பு குறையும். மதிப்பும் கூடும்."

**அதி விரைவில் வரும் பயன் ஆபத்தானதே...!**

அருட்பணி T. கிங்ஸிலி றெயட்

## கிறிஸ்மஸ் சிந்தனைகள் -1
## "தீவனத்தொட்டி"



ஆதாமை ஆண்டவராகிய கடவுள் ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டினார். கண்ணீரும் கவலையுமாய் சற்றுத் தூரம் கடந்து திரும்பிப் பார்க்கும் ஆதாம். ஏதேன் தோட்டத்தை ஏக்கத்தோடு பார்க்கிறார். ஆதாமை வெளியே அனுப்பியதில் கடவுளுக்கு சற்றே வருத்தம் 'நான் கழுதையுடன் தீவனத் தொட்டியில் உணவருந்த வேண்டுமா? என் குழந்தையின் வாய், கழுதைகள் உண்ணும் தீவனத் தொட்டியில் பட வேண்டுமோ?' என்று கேட்டுக்கொண்டே ஆதாம் நகர்கின்றார். அவரின் பார்வையிலிருந்து தோட்டமும் மறைகின்றது, கடவுளும் மறைகின்றார்.

'காளை தன் உடைமையாளனை அறிந்துகொள்கிறது. கழுதை தன் தலைவன் தனக்குத் தீனி போடும் இடத்தைத் தெரிந்துகொள்கின்றது. ஆனால், இஸ்ரயேலோ என்னை அறிந்துகொள்ளவில்லை. என் மக்களோ என்னைப் புரிந்துகொள்ளவில்லை (எசா 1:3) என்று எசாயா இறைவாக்கினர் ஆண்டவராகிய கடவுளின் சோக வார்த்தைகளைப் பதிவுசெய்கின்றார்.

ஒரு பக்கம், கழுதையின் தீவனத் தொட்டியில் இருந்தும் அதன் பக்கம் திரும்பாத இறுமாப்பு இஸ்ரயேலுக்கு. இந்த இரண்டுக்கும் ஒரு முற்றுப்புள்ளியாக இருக்கின்றது 'தீவனத் தொட்டியில் பொதிந்து வைக்கப்பட்ட குழந்தை' இயேசுவின் பிறப்பு நிகழ்வை வேகமாகப் பதிவு செய்யும் லூக்கா' தீவனத் தொட்டி' என்று வந்தவுடன் நிறுத்தி நிதானமாக மூன்று முறை அதை எழுதுகின்றார்.

"எனது வெற்றிகளின் மூலம் என்னை மதிப்பிடாதீர்கள், எத்தனை முறை நான் கீழே விழுந்து, மீண்டும் எழுந்தேன் என்பதன் மூலம் மதிப்பிடுங்கள்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## ஏதேன் தோட்ட மனிதர்கள்

10

# உடல் இறையியலும் முதற்பாவமும்

### 3. மனித உடலின் சுதந்திரமும் அதன் வீழ்ச்சியும்

முதற்பாவத்திற்கு முன் மனித உடலானது பாவமாசின்றி இருந்தது. இதனை நாம் முதல் நிர்வாணம் பற்றிய ஆய்வில் கவனித்தோம். மனித உடலும் சுதந்திரமாக இருந்தது. அத்தோடு உண்மையான அன்பு மொழியை பேச மனிதன் மனச்சுதந்திரம் உடையவனாக இருக்க வேண்டும். என்கிற கருத்தை திருத்தந்தைப் போதிக்கின்றார். மனச்சுதந்திரம் இல்லாமல் ஒரு ஆணும் பெண்ணும் தூய்மையாக அன்பு செய்ய முடியாது. இந்த இடத்தில் இன்னுமொரு கருத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது பாவத்தால் மனித உடல் பாதிக்கப்பட்டுள்ளதே தவிர பாவத்தின் விளைவாக மனித உடல் உருவாகவில்லை. பாவம் என்பது ஆன்மீகத்தைச் சேர்ந்தது. ஆனால் மனிதம் என்பது ஆன்மா மற்றும் உடல் ஆகியவற்றின் இணைப்பாக இருக்கின்றது. ஆகவே எந்தவொரு பாவச்செயலும் மனித உடலை பாதிக்கிறது, நாம் மரிக்கும் போது மனித உடலின் வீழ்ச்சியுற்ற நிலையை அனுபவிக்கின்றோம். மரணம் முதற்பாவத்தின் விளைவாகும்.



இறைவன் எம்மை சாவுக்குத்தான் படைத்தார் என்று சொல்ல முடியாது? அது பொருளற்ற வாக்கியமாக இருக்கிறது. ஏனெனில் இறைவன் வாழ்வின் ஊற்றானவர். நாம் வாழ்வு பெறவும் அதுவும் நிறைவாகப் பெறவுமே அவர் தம் ஒரேப்பேறான மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். இறைவன் மரணத்தை ஏற்படுத்தவில்லை. நீதிமான்களின் சாவில் அவர் மகிழவும் மாட்டார் என்கிறது ஞானநூல் (ஞானநூல் 1:13 - 14) மரணம் இறைவனிடமிருந்து ஊற்றெடுக்கவில்லை. மாறாக பாவத்தின் விளைவுதான் மரணம் ஆகும்.

முதற்பாவத்தின் மற்றுமொரு விளைவுதான், சீர்குலைந்த பாலியல் ஆசைகள் ஆகும். உதாரணமாக, ஒரு ஆண் ஒரு பெண் மீது காம ஆசைப்படுகிறான் என வைத்துக்கொள்வோம். அவன் அவளை தீய ஆசைக்காக மட்டுமே தேடுகிறான். அவளை ஒரு சடப்பொருளைப்போல சிற்றின்பத்திற்கு மட்டும் பாவிக்கிறான். அவளில் வெளியழகை மட்டுமே நோக்கி கட்புலனாகாத அவளின் அகஅழகை பார்க்காமல் விட்டுவிடுகின்றான். பாவம் என்பது மனித உடல் குறித்துக்காட்டும் அகஅழகை உதாசீனம் செய்ய தூண்டுகிறது. இதையே நாம் முதற்பாவத்தின் மற்றுமொரு விளைவாக கருதுகிறோம்.


### 4. மனித உடல் மீட்கப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்து தனது மீட்பின் செயல் ஊடாக, அதாவது தனது பாடுகள், மரணம், உயிர்ப்பு ஊடாக, மனித உடல் மற்றும் மனித வாழ்வின் மகத்துவத்தை மீண்டும் நிலைநாட்டினார். அவரின் உடல் சிலுவையில் அறையப்பட்டது. அவர் மரணித்தார். அவரது மரணமே எமது உடலின் புதுப்பித்தலுக்கு காரணமானது. அவரது உடலை படைவீரன் ஒருவன் ஈட்டியால் திறந்தப்போதுஇரத்தமும் நீரும்



வெளிவந்தன. அங்கே தான் திருச்சபையின் அருட்சாதன வாழ்வு ஊற்றெடுக்கின்றது. இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்தப்பின் சீடர்களுக்கு காட்சி அளித்தார். சீடர்கள் அவரின் உடலைத் தொட அனுமதித்தார். தோமா அவரது காயங்களை தொட்டார். உடலின் உயிர்ப்பை அவர் நம்பினார். எமது வாழ்க்கை இயேசுவின் மரணம் உயிர்ப்பிற்குப்பின், ஜென்மபாவத்திற்கு முன்பிருந்த வாழ்வைவிட மிகச்சிறப்பான வாழ்க்கையாக பரிணமித்துள்ளது. இறைவன் வரலாற்றில் நுழைந்தார். தம் ஒரேப் பேறான மகனை மனிதனாக இவ்வுலகில் பிறக்கச் செய்தார். கட்புலனாகாத இறைவன் நாம் காணும்படி எம்மிடையே வந்தார். அவர் மனுவுரு எடுத்தார், மாமிசமானார், நம்மிடையே குடிக்கொண்டார். எம்மால் அவரைத் தொடமுடியுமாயிருந்தது, நுகரமுடியுமாயிருந்தது. இன்று நற்கருணையில் எமக்கு அவரை சுவைக்கமுடியும். இறைவன் நம்மோடு இருக்கிறார். அவர் எம்மோடு மிகநெருக்கமாக தோழனாக இருக்கிறார். எம்மால் அவரை அறிந்துகொள்ள முடியும். அன்பு செய்யமுடியும். அவராலேதான் எமது பாவங்கள் கழுவப்பட்டுவிட்டன. எமக்கு புதுவாழ்வு கிடைத்தது. நாம் புதியவாழ்வுக்காக கிறிஸ்துவில் உயிர்ப்பிக்கப்படுகின்றோம்.

கிறிஸ்து தனது மீட்புச் செயலால் எம்மை மீண்டும் தொடக்கத்தின் முன் அனுபவங்களுக்கு அழைத்துச்செல்கின்றார். "யார் இந்த இயேசு கிறிஸ்து?" புனித யோவான் தனது நற்செய்தியைப் பின்வருமாறு ஆரம்பிக்கின்றார். (யோவான் 1: 1 - 2)



"தொடக்கத்தில் வாக்கு இருந்தது அவ்வாக்கு கடவுளோடு இருந்தது அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார்."

வாக்கு என்பது ஒருவரிடமிருந்து மற்றவரை நோக்கிப் புறப்படுவதாகும். அது ஒருவரின் மனதிலிருந்து புறப்படுகின்றது. அது ஒருவரின் உள்மனதில் இருந்து புறப்பட்டு மற்றொருவரின் உள்மனதை நோக்கி தொடுக்கப்படுகின்றது. அன்புக்குரிய, உண்மைக்குரிய மற்றும் நம்பிக்கைக்குரிய சொற்கள் ஒருவர் மற்றவரின் மனதை தொடுகின்றன. அதேபோல் மிகக்கொடூரமான, மனதை புண்படுத்துகின்ற சொற்களும் இருக்கத்தான் செய்கின்றன. சொற்கள் மனித உறவுகளை கட்டியெழுப்பி நிலைக்கச்செய்கின்றன. அவை ஒரு மனிதனின் இதயத்தில் இருந்து புறப்பட்டு மற்றுமொரு மனிதனின் இதயத்தில் சென்று தங்குகின்றன. ஆகவே சொற்கள் ஒரு மனிதனிடம் இருந்து இன்னுமொரு மனிதனுக்க கிடைக்கும் பரிசாகும். சொற்கள் இதயத்திற்கு இதயம் இடமாறுவதால் அது ஒருவர் மற்றவரின் வாழ்வை மாற்றுகிறது.

மனித வார்த்தைகளுக்கு இத்தனை சக்தி இருக்கின்றதென்றால் வார்த்தையான மனுவுருவான



இயேசு எப்படிப்பட்டவர் என்று சிந்திப்போம். தந்தை இறைவனால் உரைக்கப்பட்ட வார்த்தையானவர் அவர், தந்தை இறைவன் இவ்வாகக் கை மிகத்தெளிவாகவும் ஆணித்தரமாகவும் உரைத்தார். மற்றைய வார்த்தைகள், இதயத்தால் மட்டும் உணரமுடியும். ஆனால் இயேசு என்னும் வார்த்தையை நாம் பார்க்கவும், தொட்டுணரவும், சுவைக்கவும் கூடியதாய் இருக்கிறது, இந்த வார்த்தையே மாமிசமானார்.

இயேசுவே அவ்வார்த்தை இயேசு இறைவன் ஆவார். அதேவேளை அவர் முழு மனிதனாகவும் இருக்கின்றார். இறை, மனித இருசுபாவங்களை ஒருங்கே கொண்டவராக வார்த்தையான இறைவன் மனுவுரு ஆனார். தந்தை இறைவனால் எமக்கு அருளப்பட்ட அருளடையாளம் அவரே.

வார்த்தையான இயேசு எம்மில் இரு வகைகளில் பேசுகிறார். முதலாவதாக நாம் பேசுவது போலவே அவரும் பேசுகிறார். அதாவது அவருடைய வார்த்தைகள் நான்கு நற்செய்திகள் நிறைய கொட்டிக்கிடக்கின்றன. அவர் மனிதர்களோடு உரையாடுகின்றார், கற்பிக்கின்றார், எம்மை "தொடக்கத்திலே" நிலைக்கு அழைத்துச் செல்கிறார். இரண்டாவதாக அவர் தம் வாழ்வாலும் செயற்பாடுகளாலும் எம்மோடு பேசுகிறார். மரியன்னையிடம் பிறந்து, வளர்ந்து, கீழ்ப்படிந்து நடந்து, நாளாந்த வேலை செய்து, நண்பர்களோடு பழகி, விளையாடி வாழ்ந்துகாட்டிய வாழ்வின் ஊடாக எம்மோடு பேசுகிறார். முப்பது வயதில் பணிவாழ்வை ஆரம்பித்த யூத ராபிகள் போல இயேசுவும் தனது முப்பது வயதில் பணிவாழ்வை ஆரம்பித்தார். அவர் போதித்தார், கற்பித்தார், நோயாளிகளை சுகப்படுத்தினார், இறந்தவர்களை உயிர்ப்பித்தார், மன்னித்தார், கருணைக் காட்டினார், சிலுவையில் பாடுகள் பலபட்டு, மரித்து உயிர்த்தெழுந்தார்.

இயேசுவின் மரணம் மற்றும் அவரது உயிர்ப்பே அவரது மீட்புச்செயலின் செயலாய் இருக்கிறது. அவர் தன்னையே இறைவனுக்கு பலியாக கொடுத்தார். இறைவன் அவரை உயர்த்தினார். இதனால் எமது பாவங்களும் மன்னிக்கப்பட்டன. இயேசுவின் இந்த மீட்புச் செயலால் எமக்கு புதுவாழ்வு வழங்கப்பட்டது. இந்த புதிய வாழ்வு எமக்கு இரண்டு வழிகளில் கிடைக்கின்றன. முதலாவது, இறைவார்த்தை மூலமாகவும், இரண்டாவதாக இயேசு கிறிஸ்து ஏற்படுத்திய அருட்சாதனங்கள் ஊடாகவும் கிடைக்கின்றன.

இயேசு கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்க்கையில், இயேசு தமது வார்த்தையாலும் செயல்களாலும் போதித்தார். இவற்றை நாம் நற்செய்தி ஏடுகளில் வாசிக்கின்றோம். நற்செய்தி எம்மை இயேசுவின் உயிருள்ள பிரசன்னத்தோடு இணைக்கிறது. இறைவார்த்தை இயேசுவின் வாழ்வோடு எம்மை தொடர்புபடுத்துகின்றது. இவ்வாறு கிறிஸ்துவை எமது வாழ்வில் பெற்றுக்கொள்கின்றோம். இயேசுவும் அவருக்குள் எம்மை இணைத்து கொள்கிறார். இவ்வாறு கிறிஸ்துவை எம்மால் உணர முடியும். அதேபோல் அன்பு செய்ய முடியும்.

*அருட்பணி. கிறிஸ்டிபோல்*
*இயக்குநர், பொதுநிலையினர் பணியகம்*
*கண்டி மறைமாவட்டம்*

"கோபம் விஷம் குடிப்பதைப் போன்றது, ஆனால் நம்பிக்கை உங்கள் எதிரிகளையும் அழிக்கும் வல்லமை மிக்கது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு முதல்நாளிலே மரியன்னை திருவிழா ஏன்?

அன்னைமரி விடியற்கால நட்சத்திரம். சூரியன் உதிக்கப் போகிறான். என்பதை முன்னறிவிப்பது விடியற்கால நட்சத்திரம் உலகிற்கெல்லாம் ஒளிதரும் மாபெரும் சூரியனாகிய இயேசுவை மரியா உதிக்கச் செய்ததால் அன்னை மரி விடியற்கால நட்சத்திரம் எனும் பேறுபெற்றவர். இந்தப் புதுவருடம் முழுவதும் அன்னையின் அன்பு பராமரிப்பு. அவரின் பரிந்துரைசெபம் நமக்குத் தடையில்லாது கிடைக்கத்தான் புத்தாண்டின் தொடக்கத்திலேயே அன்னைமரிக்கு திருவிழா

பெற்றதாயின் சொல்லை எந்த மகனும் தட்டமாட்டார். அன்னைமரி பரிந்துரை செபத்துக்கு எவ்வளவு சக்தி உண்டு என்பதை கானா திருமண நிகழ்விலே பார்க்கிறோம். அன்னை பரிந்துரைத்தால் இயேசுவும் தம் முதல் அற்புதத்தை செய்கிறார். அற்புதங்கள் செய்கிறவர் நம் அருகிலிருக்கிறார். அந்த அற்புதங்களை செய்ய வைக்கிற அன்னையின் பரிந்துரையும் நமக்கு என்றும் இந்த புதுவருடம் முழுவதும் உள்ளது என்பதை உறுதிப்படுத்த தான் புத்தாண்டின் தொடக்கத்திலே அன்னைமரிக்கு அன்புப் பெருவிழா எடுக்கின்றோம்.

## நள்ளிரவில் 12 மணிக்கு பதிலாக 12.30க்கு கிறிஸ்துமஸ்

ஜெர்மனியில் ஓர் ஊரில் நள்ளிரவில் 12 மணிக்கு பதிலாக 12.30க்கு கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறார்கள். காரணத்துக்கு ஒரு கதை அவ்வூர் மக்கள் சொல்றாங்க. அந்த ஊர்ல ஒரு பாட்டி வருசாவருசம் குழந்தை இயேசுவுக்கு சட்டை தைத்துக்குடுப்பார். அந்த வருசமும் சட்டை தைச்சு ரெடியா வச்சிருந்தார். ஆனால் அவரை கூட்டிட்டு போக மரணதேவன் காவலன் வந்தான். 12மணிக்கு குழந்தை இயேசுவுக்கு சட்டை போட்டுட்டு வர்றேன்னு சொன்னதுக்கு காவலன் ஒத்துக்கல. பாட்டி சட்டைய ஊர் மக்கள்ட்ட குடுத்துட்டு காவலனுடன் ரதத்துல புறப்பட்டார். இயேசுவும் அந்த ஊர்ல பிறக்க விண்ணகத்திலிருந்து வந்து கொண்டிருந்தார். இருவரும் நடுவுல சந்திச்சாங்க "இயேவுவே உமக்கு என்ன அவசரம். நான்தானே வருசாவருசம் சட்டை தச்சு போடுறேன். நான் சட்டைய உனக்கு போட்டபிறகு கூப்பிட்டிருக்கலாமேனு இயேசுவிடம் பாட்டி சொல்ல. "மறந்துட்டேன் பாட்டி. கவலபடாதீங்க, உங்கள நேரா மோட்சத்துக்கு அனுப்புறேன்னு காவலன்ட்ட இயேசு சொல்ல. காவலனோ, "எனக்கு பயமாயிருக்கு லேட்டானா மரணதேவன் திட்டுவார். நீங்களே வந்து பாட்டிய விண்ணகத்துல விட்டுட்டு வாங்கன்னான்." இயேசு அந்த பாட்டிய விண்ணகத்துல விட்டுட்டு அந்த ஊர் கோயிலுக்கு 12.30 க்கு வந்தார். 'ஏன் லேட்னு' மக்கள் கேட்க என்னை அன்பு செய்கிறவர்களுக்கு நான் பிறக்கும் நேரத்தைக்கூட தள்ளி வைக்கத்தயார். அன்பு தான் என் பெயர்னு இயேசு சொன்னார். "இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்"

## மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரின் 16வது குருத்துவ நினைவு நிகழ்வு

மறைப்பாடசாலை பரிசளிப்பு நிகழ்வில் மறைமாவட்ட மறைக்ல்வி நிலைய இயக்குனர் அருட்பணி S. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாரின் 16வது குருத்துவ நினைவு நாள் அன்புவழிபுர பங்குத் தந்தையும், திருகோணமலை மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனருமான அருட்பணி G. நிதிதாசன் அடிகளாரின் தலைமையில் பங்குச் சபை உறுப்பினர்களால் ஒழுங்கமைக்கப்பட்டு, சிறப்பிக்கப்பட்டது. அருட்தந்தை Cake வெட்டியதுடன், பங்குச்சபை உறுப்பினர்கள் சார்பாக அன்பளிப்பும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.





## நன்றியுடனான பாராட்டு நிகழ்வு

பங்கில் நீண்ட காலமாக பல்வேறு பணிகளில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டு வந்த திரு ஜேம்ஸ் வில்லியம் லெப்பான். திருமதி சிந்துஜா லெப்பான் தம்பதியினர் தமது சொந்த இடத்திற்கு மாற்றம் பெற்றுச் செல்வதால் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. திரு. லெப்பான் 1995ம் ஆண்டு முதல் அன்புவழிபுர ஆலயத்தில் பாடகர்குழாமிற்கு பொறுப்பாளராக இன்று வரை இருந்து வந்ததுடன். 2009ம் ஆண்டு முதல் சிறப்பு நற்கருணைப் பணியாளராகவும், பங்குப்பணிப் பேரவையில் நீண்டகால உறுப்பினராகவும் இருந்து பணிபுரிந்ததுடன். 2011ம் ஆண்டு முதல் மறைமாவட்ட குடும்ப அப்போஸ்தலிக்க பணியில் தமது மனைவியோடு இணைந்து பணிபுரிகின்றார். திருமதி சிந்துஜா லெப்பான் 2004ம் ஆண்டு முதல் மறையாசிரியராகப் பணிபுரிவதோடு, வழிபாட்டுக்குழு, கல்விக்குழு, பங்குப்பணி பேரவை செயலாளராக நீண்டகாலம் பணிபுரிந்து வருவதோடு, பங்கில் அருளடையாளங்களுக்கு மாணவர்களை, வளர்ந்தோரை தயார்ப்படுத்தல் மற்றும் திருமண சரிப்படுத்தல்களுக்கு ஆயத்தம் செய்தல் முதலான பணிகளையும் தம்பதியினராக மேற்கொள்டுள்ளனர்.

இப்பரிசளிப்பு நிகழ்வில் பங்குப்பணிப் பேரவையினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், இவர்கள் பணிக்காக நன்றியுடன் நினைவு கூர்ந்து தொடர்ந்தும் இவர்கள் பணி சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு பங்குத் தந்தையின் ஆசீருடன் அன்பளிப்பும் வழங்கிவைக்கப்பட்டது.





புனித சதா சகாய அன்னை ஆலயம் - அன்புவழிபுரம் ஒளிவிழா, பாராட்டு, குருத்துவ நினைவு, சிறப்பு நிகழ்வுகள்



"விழாமலே வாழ்ந்தோம் என்பதல்ல... விழும் ஒவ்வொரு முறையும், மீண்டும் எழுந்தோம் என்பதே வாழ்வின் பெருமை"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளையோருக்கான தொடர் - 04

காலைப் பொழுதில் புத்துணர்ச்சியூட்டும் சூரியனும் இரவில் மினுமினுக்கும் ஒவ்வொரு நட்சத்திரமும் எப்பொழுதுமே மெய்சிலிர்க்கச் செய்யும் தென்றலும் இயற்கைச் சூழலில் இரகசியமும் இறை அன்பை வெளிப்படுத்தகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இவ்வுலகில் தோன்றும் ஒவ்வொரு பச்சிளங்குழந்தையும் இன்றும் இறைவன் நம்மை அன்பு செய்கின்றார். என்று விமர்சித்துக் கொண்டேதான் பிறக்கின்றன.

வாழ்வு இனிமையாகின்றது. அர்த்தம் பெறுகின்றது. அன்பு கிடைக்கப் பெறுவதால் உயிர் ஒன்று உருவாகின்றது. தாய் தந்தையர் அன்பில் தம்மைக் கையளிக்கும்போது உளப்பிறப்பு நிஜமாகின்றது. நீ விரும்பப்படுபவன், விரும்பப்படுபவள், தேவைப்படுபவன் என்ற உணர்வை அன்பும் அரவணைப்பும் அளிக்கும்போது சமூகப் பிறப்பு ஏதுவாகின்றது. நீ முக்கியத்துவம் வாய்ந்தவன் என்ற அனுபவத்தைச் சுற்றமும் நட்பும் தரும்போது வேதனையும், வெறுமையும் அன்பற்ற வாழ்வின் அனுபவங்கள் அன்பைப் பெறாத மழலை மரணத்தைத் தழுவலாம். வணப்பற்ற குழந்தையின் உளவளர்ச்சி தடைப்படலாம். தட்டிக் கொடுத்த தலைப் பெறாத இளைஞனின் ஆளுமை குறைபடலாம். அன்பால் உருவாகி வளர்வது ஓர் உறவு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வலுப்படும் உறவு மற்றொருவரின் நலனில் இன்பம் பெறுவதே இவ்வுறவின் தன்மை மற்றொருவர் வாழ, வளர, மகிழ, உயர தன்னையே கொடுத்தல் அன்பின்

# அன்பு - சுருதி சேரும் இராகங்கள்

இலக்கணம் பிறர் நலனுக்காய் தன்னை இழத்தலே அன்பு எனும் அர்ப்பணம். அன்பின் வெளிப்பாடுகள் சில நட்பு, காதல், திருமண அன்பு, இளமைப் பருவத்தில் அதிக முக்கியத்துவம் பெறுவது நட்பு, நட்பைத் தேடுவதும் நண்பர்களின் துணை, ஆதரவு, அறிவுரை, ஊக்கம் இவற்றால் வளர்ச்சியடைவதும் இளமையின் தேவகைளில் இன்றியமையாத நட்பு. அனுபவம் சிலருக்கு ஏமாற்றத்தை வேதனையைத் தரலாம். நட்பு பற்றிய தவறான எண்ணங்களும், எதிர்பார்ப்புக்களும் இருப்பதால் பல வேளைகளில் நட்பு கசந்து விடுகின்றது.

### நல்ல நட்பு

- ✶ தனிமையைப்போக்க துணை புரிகின்றது.
- ✶ ஏற்றுக் கொள்ளப்படுகின்றேன் என்ற நிறைவைத் தருகின்றது.
- ✶ அக்கறையுடன் செவிமடுக்க நேரம் தருகின்றது.
- ✶ மனம் விட்டு பகிர்ந்து கொள்ள நம்பிக்கை வளர்க்கின்றது.
- ✶ வாழத் தகுந்தவன் என உறுதிப்படுத்துகின்றது.
- ✶ சேர்வடையும் நேரத்தில் ஊக்கம் ஊட்டுகின்றது.
- ✶ நிறைகளைக் கண்டு தட்டிக் கொடுக்கின்றது.
- ✶ குறைகளைக் கண்டு தீர்ப்பிடுவது இல்லை
- ✶ தவறுகளை அன்புடன் சுட்டிக் காட்டுகின்றது.
- ✶ ஏமாற்றங்கள் ஏற்படும் போது எதார்த்தமாக சிந்திக்கின்றது.
- ✶ விரிசல் உருவாகும் போது மனம்விட்டு உரையாடத் தேடுகின்றது.
- ✶ மன்னிக்கத் தயங்குவது இல்லை
- ✶ தீர்வுகள் எடுக்க வழிகாட்டுகின்றது.
- ✶ செயற்பாடுகளில் கைகொடுக்கின்றது.

தனக்கு நண்பர்கள் இல்லை என்று வருந்துவோர் சிலர். தனக்கு நண்பராக வருபவர் விலகி விடுகின்றனர் என ஏமாற்றமடைவோர் சிலர் நட்பை வளர்த்துக்கொள்ள தன்னால் முடியவில்லை என விரக்தியுறுவோர் சிலர் இன்று நீங்கள் நட்பைத் தேடுகின்றீர்களா?

### சிந்தித்துப் பாருங்கள்

♦ நண்பன் ஒருவன் உங்களைத் தேடி வரவேண்டுமென காத்திருக்காதீர்கள் நட்புடன் பழக நீங்கள் முன்வர முடியும். நீங்கள் நண்பனாக மாறுங்கள். உங்களை நண்பனாக்கிக் கொள்ள ஒரு சிலர் காத்திருக்கலாம்.

♦ உங்கள் நண்பன் உங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமென விரும்புகின்றீர்களா? உங்கள் நண்பரிடமும் அதே ஆவல் உண்டு. அவர்கள் பேசுவதைக் கேட்கச் செவி கொடுங்கள். உரையாடும் போது அவர்களிடம் என்ன உணர்வுகள் உள்ளன என்பதைப் புரிந்துகொள்ளத் தேடுங்கள்

♦ நீங்கள் ஆர்வம் கொள்பவற்றில் உங்கள் நண்பனும் அக்கறை காட்டுவதை எதிர்பார்க்கின்றீர்களா? அவனிடமும் இவ்விருப்பு உண்டு. அவனது விருப்பு வெறுப்புக்களைத் தெரிந்து கொள்ளுங்கள், அவனுக்கு மகிழ்ச்சி தருபவற்றில் உங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்துங்கள்.

♦ நண்பனோடு மனம் விட்டு உரையாடுங்கள். உங்கள் உணர்வுகளை நீங்கள் வெளிப்படுத்தும் பொழுது உங்கள் உரையாடல் ஆழம் பெறும். உங்கள் கசப்பு உணர்வுகளை, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்பொழுது நம்பிக்கை அதிகமாகும்.

♦ உங்கள் நண்பனிடம் கருத்துவேற்றுமை இருப்பது தவறல்ல வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்க அவனுக்கு உரிமையுண்டு. அவனுடைய தனித்தன்மையை ஏற்றுக்கொள்ளுங்கள்.

♦ நீங்கள் விரும்புவதை உங்கள் நண்பன் நிறைவேற்றினால் மகிழ்ச்சி கொள்ளுங்கள். அதை நிறைவேற்ற அவன் விரும்பாவிட்டால் வற்புறுத்தாதீர்கள்.

♦ உங்கள் நண்பனின் செயல்கள் உங்களுக்கு ஏமாற்றத்தை தருவிக்கலாம். ஏமாற்றங்கள் தோல்விகளுக்கு நட்பிலும் இடம் உண்டு. பிறபாலாரோடு கொள்ளும் நட்புறவை சில கலாச்சாரங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. சில கலாச்சாரங்கள் குறிப்பிட்ட வயது வரம்பிற்கு கீழ் ஆண், பெண் நட்புறவை வரவேற்பது இல்லை.

அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்



## கிறிஸ்மஸ் சிந்தனைகள் - 2 “இம்மானுவேல்”

இறைவாக்கினர் எசாயா “இம்மானுவேல்” பற்றி இறைவாக்கு உரைத்தார். “இம்மானுவேல்” என்றால் கடவுள் நம்மோடு என்று பொருள். இஸ்ரயேல் மக்கள் அதிகமாக அடிமைத்தனங்களை அனுபவித்துள்ளனர். போரில் தோல்வியுற்று அதன் விளைவாக பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டனர். மேலும் அவர்கள் அடிமைகளாக அசிரியா நாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டனர். இத்தகைய சூழலில் அவர்கள் கண்ணீரோடும் கவலையோடும் இருந்தனர். அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக தான் எசாயாவின் வார்த்தை அமைந்துள்ளது. “காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது” என்ற இறைவார்த்தை அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக அமைந்துள்ளது. அதேபோல் ஒரு ஆண் மகவு கொடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. “ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார் ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார் ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும் அவர் திருப்பெயரோ ‘வியத்தகு ஆலோசகர் வலிமை மிகு இறைவன் என்றுமுள தந்தை அமைதியின் அரசர்’ என்று அழைக்கப்படும். அவரது ஆட்சியின் உயர்வுக்கும் அமைதி நிலவும் அவரது அரசின் வளர்ச்சிக்கும் முடிவு இராது. தாவீதின் அரியணையில் அமர்ந்து தாவீதின் அரசை நிலைநாட்டுவார்.



இன்று முதல் என்றென்றும் நீதியோடும் நேர்மையோடும் ஆட்சிபுரிந்து அதை நிலைபெயராது உறுதிப்படுத்துவார். படைகளின் ஆண்டவரது பேரார்வம் இதைச் செய்து நிறைவேற்றும். என்ற இறைவசனம் ஆண்டவரின் அளப்பரிய அன்பைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது. துன்பத்தில் உழன்று கொண்டிருந்த இஸ்ரயேல் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக அமைந்துள்ளது. இறைவாக்கினர் எசாயாவின் மூலம் இம்மகிழ்ச்சியான செய்தி இஸ்ரயேல் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

## இறைமகனின் வரவினால்......

Fr. N.C அருள்வரதன்

**கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்**

**போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்**
**இதோ கவிதை வரிகள்**

- ♦ இடையே மின்னுவது
- ♦ இசைகூட்டி இடிக்கவானம்
- ♦ வானுயர எழுந்து மேகம்
- ♦ அலை மோதி ஆழ்கடலும்
- ♦ ஆனந்தக் களிப்படைய
- ♦ இறைமகனின் வரவதனால்
- ♦ இயற்கையுமே இனிமையூட்டும்
- ♦ வலம்வருமே பவனியாக
- ♦ காடடர்ந்து இசைதரவே
- ♦ கானுயர்ந்த சோலைகளும்
- ♦ தேனடர்ந்த மலர்களுமாய்
- ♦ தென்றலுமே உறவுகொள்ள
- ♦ வானிறங்க வந்தவரை
- ♦ வரவேற்று மகிழ்வோமே
- ♦ புன்னகையைக் கட்டவிழ்க்க
- ♦ பூவடர்ந்த மலர்ச்சோலை

**இப்போது கவிதைவரிகளை சரியாக வடிவமையுங்கள்**

முடிவுத்திகதி

“புத்தக வாசிப்பிற்கு அனுமதித்தால் போதும், சிறைச்சாலையும் சுதந்திரமான இடம் தான்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்தம் எங்கிருந்து வருகின்றது?

இரண்டு நண்பர்கள் நட்புறவோடு கதைத்துக் கொண்டிருக்கும் போது இருக்கும் அமைதி, அவர்கள் பிரச்சனையோடு கதைக்கும் போது இருப்பதில்லை. நட்புறவோடு இருக்கும் போது, அவர்கள் மிகவும் சப்தமிட்டு கதைப்பதில்லை. ஏன், அவர்கள் கதைப்பது பக்கத்தில் இருப்பவருக்குக் கூட கேட்பதில்லை.

ஆனால் கோபத்தோடு ஒருவர் ஒருவரிடம் விவாதம் செய்யும் நோக்குடன் கதைக்கும் போது, அவர்களிடையே ஒருமைப்பாடு இருப்பதில்லை. அந்த நேரத்தில் சப்தம் மிக அதிகமாக இருக்கும். எனவே எங்கே சப்தம் அதிகமாக இருக்கின்றதோ, அங்கே ஏதோ பிரச்சனை இருக்கின்றது என்றே அர்த்தம்.

**கோபம் உள்ள இடத்தில் சப்தம் அதிகமாவதற்குக் காரணம் என்ன?**

கோபம் ஒரு இயலாமையின் வெளிப்பாடு. தான் நினைத்த காரியம் ஏதாவது ஒரு விதத்தில் தடைப்படும்போது தடைகளை உடைத்து அந்தக் காரியத்தை கண்டிப்பாக செய்துவிடவேண்டும் என்ற வலுவான உந்துதலே கோபம். எனவே கோபம் வரும்போது, தான் செய்வது போதாது இன்னும் அதிகமாக செய்யவேண்டும் என்ற உணர்வு தானாகவே உருவாகின்றது. அதாவது, தன் செயல்பாட்டின் மீது ஒருவிதமான சந்தேகம் தோன்றுகின்றது. அதன் காரணமாக நம் செயல்கள் சற்று உக்கிரமடைகின்றன. இந்த விதத்தில் நாம் கதைக்கும் குரலும் பிறருக்கு கேட்காமல் போய்விடுமோ என்ற நம்பிக்கையின்மை ஏற்படுகின்றது. அந்த நம்பிக்கையின்மையின் பொருட்டு நாம் கதைப்பதை பிறர் கேட்டே ஆகவேண்டும் என்பதற்காக நம் குரல் கடுமையாகின்றது. உரக்க ஒலிக்கின்றது.

## இன்னுமா தயக்கம் - 21

இங்கே நாம் சற்று கவனிக்க வேண்டிய ஒன்று, கோபம் வரும் போது, நம்மிலேயே நமக்கு நம்பிக்கை தளர்வடைகின்றது. அதனால் தான், மற்ற நபர் மிக அருகில் இருந்தாலும், நம் குரல் அவருக்கு கேட்காமல் போய்விடுமோ என்ற அச்சத்தால் நம் குரலை உயர்த்திப் பேசுகின்றோம். எனவே கோபத்தோடு அச்சமும், நம்பிக்கையின்மையும் உடனே வந்துவிடுகின்றது. இவை அனைத்துமே எதிர்மறையான எண்ணங்கள்.

அதே வேளை, நட்புறவோடு ஒரு மனிதன் கதைக்கும் போது, அவன் தன்னையும் மற்ற மனிதரையும் நம்புகின்றான், அச்சம் நீங்குகின்றான். எனவே மிக அமைதியாக பேசினாலும் தான் சொல்வது மற்ற மனிதருக்கு கேட்கும் என்று நம்புகின்றான். எனவே நட்புறவோடு கதைக்கும் போது, நம்பிக்கையும் துணிவும் ஏற்படுகின்றது. இது நேர்மறையான எண்ணம்.

**நம்பிக்கையின்மை மேலிடும் போது...**

நாம் கடவுளிடம் வேண்டும் போதும் கூட சப்தம் அதிகமாக இருக்கின்றது என்றால் நம் நம்பிக்கையில் ஏதோ பிரச்சனை இருக்கின்றது, இறைவன் மீது நாம் கொண்ட நம்பிக்கையில் தளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றுதான் அர்த்தம். எனவே தான் இறைவன் நம்மை கண்டிப்பாக பார்த்துவிடவேண்டும் என்று நினைத்து, அவர் பார்ப்பதற்காக சில வேலைகளை நாம் செய்கின்றோம். நம்மை நாமே காயப்படுத்திக் கொள்வது, துன்புறுத்திக் கொள்வது, சப்தமாக ஜெபிப்பது, அழுவது போன்றவை இறைவன் நம்மைக் காணவேண்டும் என்பதற்காக நாம் செய்யும் முயற்சிகள். அதாவது, இறைவன் பொதுவாக நம்மைப் பார்ப்பதே இல்லை. எனவே ஏதாவது செய்து அவரது கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதே இதன் கருத்து ஆகும். இதையே 'நம்பிக்கையின்மை' என்று நான் குறிப்பிடுகின்றேன்.

நம் நம்பிக்கையின் அடையாளம் என்பது, நாம் இறைவனை முழுமையாக நம்புகிறோம் என்பதில் இருக்கின்றது. இறைவன் முன்னிலையில் நாம் வரும் போது நமக்குள் எற்படும் ஒருவிதமான மகிழ்ச்சி, நிம்மதி, ஆனந்தம் இவை இறைவன் மீது நாம் கொண்ட நம்பிக்கையையும் அன்பையும் காட்டுகின்றது. நாம் இந்த மகிழ்ச்சி நிம்மதியைத் தேடித் தான் ஓடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், இவை நம்பிக்கை, அன்பு ஆகியவற்றின் வெளிப்பாடுகள் என்று தெரியாமல், தேடிக் கொண்டிருக்கின்றோம். "இறைவன் திருமுன் அமைதியாக அமர்ந்து அவர் சொல்வதைக் கேளுங்கள்!" என்று புனித அவிலா தெரசா கூறுவார். இது இறைவன் மீது அவர் கொண்ட அளவு கடந்த நம்பிக்கை மற்றும் அன்பையே காட்டுகின்றது. இத்தகைய அன்பும் நம்பிக்கையுமே கிறிஸ்தவத்தின் நோக்கமாகும்.

**வியாபாரமா, பாசமா...**

முதல் நிகழ்ச்சி: நண்பர் ஒருவர் தன் வீட்டிற்குத் தேவையான ஒரு முக்கியமான பொருளை வாங்க ஒரு வியாபாரியைச் சந்திக்கச் செல்கிறார். அந்த வியாபாரி, அந்தப் பொருளை வாங்கிக் கொண்டு வருவதற்கு ஒரு வார காலம் ஆகும். எனவே ஒரு வாரம் கழித்து தன்னைச் சந்திக்கும் படியாக கூறுகின்றார். ஒருவாரம் கழித்து அவரை மிகவும் ஆர்வத்தோடு சந்திக்க செல்கின்றார். அவரை தூரத்தில் பார்த்தவுடனேயே நண்பருக்கு ஒருவிதமான மகிழ்ச்சி, அவரைச் சந்தித்து அவரிடமிருந்து தனக்குத் தேவையான அந்தப் பொருளை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வருகின்றார்.




அதன் பின் அந்த வியாபாரியைப் பற்றிய எண்ணமே அவருக்கு வரவில்லை. காரணம், அவரைப் பற்றிய நோக்கம் நிறைவேறிவிட்டது.

இரண்டாம் நிகழ்ச்சி: அதே நண்பர் தன் நெருங்கிய நண்பரைச் சந்திக்க அவரது வீட்டுக்குச் செல்கிறார். அந்த நண்பரை தொலைவில் பார்த்தவுடனேயே மிகுந்த மகிழ்ச்சி, அவரோடு அந்த நாள் முழுவதையும் செலவிடுகின்றார். அவரிடமிருந்து விடைபெற்று தன் வீட்டிற்கு வருகின்றார். மறுநாள் மீண்டும் தன் நண்பருக்கு தொலைபேசியில் அழைத்துப் பேசுகிறார். அவரைப் பற்றிய சிந்தனைகள் மாறவே இல்லை.



முதல் நிகழ்ச்சியில் நண்பர் தான் மிகவும் விரும்பிய ஒரு பொருளை பெற்றிருக்கின்றார். அதன் பின் அந்த பொருள் தான் அவரது மனதில் நீங்காமல் நின்றது. இரண்டாம் நிகழ்ச்சியில், அவர் எந்தப் பொருளையும் பெறவில்லை, ஆனால் அவரது மனம் நிறைகின்றது, மகிழ்கின்றது. வித்தியாசம் வியாபாரமும் பாசமும், வியாபாரத்தில் பாசமில்லை, பாசத்தில் வியாபாரமில்லை.

கடவுள் முன் நாம் நிற்கின்றபோது, இத்தகைய வேறுபாடுகளை நாம் நம்மில் சோதித்தறிய வேண்டும். நான் விரும்பிய ஏதோ ஒன்றை வாங்கச் செல்லும் வியாபாரியா, அல்லது பல நாட்கள் காத்திருந்து சந்தித்த ஆழமான நண்பனா? வியாபாரி என்றால், நாம் விரும்பிய பொருள் கிடைத்தவுடன் நாம் நிறைவடைகின்றோம். மீண்டும் இறைவனிடம், இன்னும் அதைப் போன்று வேறொன்று கிடைத்துவிடாதா என்ற எண்ணத்தில் தான் வருகின்றோம். நண்பன் என்றால், அவரது திருமுன் நிற்பதே நமக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கின்றது. அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட நாம் இறைவன் திருமுன் வருகின்றோம்.

சற்று சிந்திப்போம், புதிய ஆண்டு ஒன்றை சந்திக்க தயாராகிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில் இந்தப் புதிய ஆண்டில் இறைவனைப் பற்றிய நம் அணுகுமுறை, வாழ்க்கையைப் பற்றிய அணுகுமுறை, நம் சக நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருடன் நம் அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி சற்று சிந்திப்போம். இறைவன் புதிய ஆண்டை சிறப்பான ஆண்டாக நமக்குத் தருவாராக.

**அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா க.ச**



## கிறிஸ்மஸ் சிந்தனைகள் - 3
## "திருக்குடும்பமா நம் குடும்பம்"

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் நன்றாகப் படிக்கக் கூடியவர். அவர் குருப் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று அரசு வேலையைப் பெற்றார். இவர்தான் இந்த ஊருக்கே முதல் அரசுப்பணியாளர் அப்பொழுது நான் அவரைப் பார்த்து "எவ்வாறு இத்தகைய இக்கட்டான சூழலிலும் உங்களால் நன்றாக படித்துத் தேர்வில் வெற்றி பெற்று அரசு வேலையைப் பெற முடிந்தது?" என்று கேட்டேன். அதற்கு அவர் "நான் இவ்வளவு தூரம் படித்து அரசு வேலை பெறும் அளவிற்கு உயர்வதற்கு காரணம் என் குடும்பம் தான். அவர்கள் செய்த தியாகம் தான் என்னை உயர்த்தி இருக்கிறது. கடின உழைப்பை கற்றுக் கொடுத்திருக்கிறது" என்று பதிலளித்தார். வெற்றியடைந்த இந்த நண்பரின் குடும்பம் இவர்க்கு நல்ல பாதையையும் கடின உழைப்பையும் காண்பித்ததால் இவர் வெற்றி அடைந்தார்.

மற்றொரு அனுபவம் எனக்கு கிடைத்தது. நான் மூன்றாம் ஆண்டு இறையியல் படித்துக்கொண்டிருக்கும் போது சிறைப்பணி செய்தேன். ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை அங்கு சென்று சிறைவாசிகளை சந்தித்து அவர்களை வழிகாட்டுவோம். அவ்வாறு ஒரு வாரம் செல்லும் பொழுது ஒரு இளைஞனைச் சந்தித்தேன். அவனிடம் நான் "இந்த சிறிய வயதில் ஏன் இந்த இடத்தில் இருக்கிறீர்? என்று கேட்டேன் அதற்கு அவன் "என் குடும்பத்தில் என்மேல் அன்பு இல்லாததேயாகும். ஏனெனில் என் தந்தையும் தாயும் ஒவ்வொரு நாளும் சண்டை போட்டுவிட்டு ஆளுக்கு ஒரு பக்கம் அமர்ந்திருப்பர். என்னை அவர்கள் பொருட்டாகக் கருதவில்லை என்னை அன்பு செய்யவில்லை. எனவே நான் விரக்தியில் வீட்டை விட்டு வெளியே சென்றேன். எனக்கு கிடைத்த நண்பர்கள் அனைவருமே என்னை தவறான வழிக்கு அழைத்துச் சென்றனர். தொடக்கத்தில் அது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் காலப்போக்கில் அதுவே என் வாழ்விற்கு எதிராக மாறியது. இங்கு வந்து ஒவ்வொரு நாளும் என் குடும்பத்தினை நினைத்து அழுது கொண்டிருக்கிறேன்" என்று பதிலளித்தார்.

ஒரு மனிதன் நல்லவராக மாறுவதும் தீயவராக மாறுவதும் குடும்ப உறுப்பினர் களின் கையில்தான் இருக்கின்றது. உண்மையான குடும்பம் என்பது வசதிகளையும் செல்வங்களையும் சேர்ப்பதற்கு மாறாக பாசங்களையும் உறவுகளையும் சேர்க்க வேண்டும். பணம் என்பது நிரந்தரமான ஒன்றல்ல மாறாக, பாசங்களும் பந்தங்களும் உறவுகளும் தான் நமக்கு நிறைவான மகிழ்வைக் கொடுக்க முடியும். இதைப் புரிந்து கொண்டவர்கள் குடும்ப வாழ்வில் மகிழ்வோடும் நிறைவோடும் வாழ முடியும்.

"உயர்ந்த சிந்தனை உயர்ந்த மனதிலிருந்தே தோன்றுகின்றது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது நம் முன்னோர் மொழி. கோவிலை மையமாகக் கொண்டே கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் வளர்ந்ததால் இப்படிச் சொல்லப்பட்டது என்று ஒரு சில வாதங்கள் இருந்தாலும், இறைவனை மையமாகக் கொண்டே எல்லாக் கலாச்சாரங்களிலும் மனித இனம் தொடக்கத்திலிருந்தே வாழ்ந்து வருகிறது. "அண்ட சராசரங்களைப் படைத்து எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை ஒரு கோவிலில் அடைத்து விட முடியுமா?" என்ற கேள்விக்கு ஒரு பெரியவர் சொன்னார். "எல்லா இடத்திலும் காற்று இருந்தாலும் மின்விசிறிக்கு கீழ் அதிகமாய் உணரப்படுவது போல, எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் கோவிலில் அதிகமாய் தன் உடனிருப்பை நாம் உணரும்படிதங்கிறார்."

## வாழ்வு சார்ந்த வழிபாடு – 11

சிலுவை வடிவ கோவில்களில் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் மட்டுமே இருக்க முடியுமென்ற அவல நிலையும் நாட்டின் பல பகுதிகளில் இருந்திருக்கிறது. உண்மையில் இயேசு கொணர்ந்த இறையாட்சியின் அடையாளங்களான கோவில்கள் அனைவரையும் இறைவனின் பிள்ளைகளாக, சகோதர சகோதரிகளாக, கடவுள் வாழும் நடமாடும் கோவில்களாகப் பார்க்கவே தொடக்க முதலே அழைக்கின்றன.

இதையே திருமூலர் பின்வருமாறு பாடி வலியுறுத்துகிறார்.

"படமாடக் கோவில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோவில் நம்பர்க்கு ஆங்கு ஆகா.
நடமாடக் கோவில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோவில் பகவற்கு அது ஆமே"

# உயிருள்ள கற்களாலான கோவில்

நமது கிறிஸ்தவக் கோவில்களை Church என்று ஆங்கிலத்தில் அழைத்துப் பழகிவிட்டோம். இந்த வார்த்தை 'திரு அவை' என்ற பொருளில் இறைமக்கள் சமூகத்தையும், 'கடவுளின் வீடு' என்ற பொருளில் கட்டடத்தையும் என இரு அர்த்தங்களை உள்ளடக்கியது. 'திரு அவை' கடவுளின் கட்டடம் என்றும் பன்முறை கூறப்பட்டிருக்கிறது (1 கொரி 3:9) கட்டுவோரால் புறக்கணிக்கப்பட்டிருப்பினும், மூலைக்கல்லாக அமைந்து விட்ட ஒரு கல்லுக்கு ஆண்டவர் தம்மை ஒப்பிட்டிருக்கிறார். (மத் 21:42, திப 4:11, 1 பேது 2:7, திபா 117:22) இந்த அடித்தளத்தின் மீது தான் திருத்தூதர்களால் திரு அவை கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இந்த அடிப்படையிலிருந்து தான் திரு அவையும் ஊன்றி நிற்கும் உறுதியையும், நிலைபெறும் தன்மையையும் பெற்றுள்ளது. இக்கட்டம் கீழ்வரும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பெறுகிறது. கடவுளின் வீடு - அதாவது, அவர் தம் வீட்டார் வாழும் இடம் (1 திமொ 3:15) தூய ஆவியார் வழியாகக் குடியிருக்கும் உறைவிடம் (திவெ 21:3) இன்னும் சிறப்பாகத் திருக்கோவில் கற்களால் கட்டப்பட்ட கோவில்களும் இத்திருக்கோவிலையே அடையாள முறையில் காட்டுகின்றன என்று திரு அவைத் தந்தையர்கள் புகழ்ந்துள்ளனர். திருவழிபாடும் இதையே திருநகரத்திற்கும், புதிய எருசலேமிற்கும் பொருத்தமாக ஒப்பிடுகிறது. ஏனெனில் இதன் உயிருள்ள கற்களால் இவ்வுலகில் நாம் கட்டி எழுப்பப்படுகின்றோம். (1 பேது 2:5) தன் மணமகனுக்காக அணி செய்யப்பட்ட மணமகளைப் போல (திவெ 21:1 - 2) உலகம் புதுக்கோலம் பூணும் காலத்திலே, வானகம் விட்டு, கடவுளிடமிருந்து இறங்கிவரும் திருநகரமென்று யோவானும் இதையே கருதுகின்றார். " (2ம் வத்திக்கான் சங்க ஏடு: திரு அவை, எண் 6) இப்படி கடவுளின் வீடாகவும் (Domus Dei) நம்பிக்கையாளர்களின் குழுமமான திரு அவையின் வீடாகவும் (Domus Ecclesiae) கோவில் அமைந்திருக்கிறது. இது உயிருள்ள கற்களால் கட்டப்பட்ட (1 பேது 2:5) இறைவனின் இல்லம். "இங்கு தான் தந்தை இறைவன் ஆவியிலும், உண்மையிலும் ஆராதனை பெறுகிறார்." (கோவிலையும், பீடத்தையும் நேர்ந்தளிக்கும் சடங்கு, RDCA முன் குறிப்புகள், எண்.1)



கட்டிடங்களான கோவில்களை விட, மனிதர்களான கோவில்களுக்கு செய்யும் சேவையின் மாண்பைச் சுட்டிக் காட்டுகிறார். "தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்கு புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது" (1 யோவா 4:20), எனவே நாம் கண்ணால் காண்கிற கோவில்கள் நம்மோடு வாழும் சகமனிதர்களை இறைசாயல்களாக பார்க்கவும் நடத்தவும் அழைப்பு விடுக்கின்றன. அதனால் தான், கட்டிடங்கள் கட்டியெழுப்பப்படும் முன்னே, இறைமக்கள் கட்டியெழுப்பப்பட வேண்டுமென திரு அவை கூறுகிறது. கட்டிடங்களுக்கு முன் நல்ல, உறுதியான, ஆழமான நம்பிக்கையாளர் சமூகத்தை உருவாக்குவதே அருள்பணியாளர்களின் பொறுப்பு.

மேலும், ஒவ்வொரு முறையும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் நடைபெறுகிற போது, கோவில் மண்ணகமும் விண்ணகமும் சந்திக்கும் இடமாக, மண்ணிலுள்ள விண்ணகமாக மாறுகிறது. இறைவன் தன் வானதூதர், புனிதர் சேனையுடன் எழுந்தருளி விண்ணகத்தின் முன் சுவையைத் தருகிறார். எனவே, கோவில் இறை - மனித சந்திப்பின் இடம், இறை அனுபவத்தின் இடம், நம் பாவங்களிலிருந்து நம்மைத் தூய்மைப்படுத்தி இறையாற்றலால் நிறைக்கும் இடம். கிறிஸ்துவின் வார்த்தையாலும், திருவுடலாலும் ஊட்டம் பெறும் இடம், நம் மன்றாட்டுகள் நறுமணப் புகைபோல், விண்ணை நோக்கி எழும் இடம். கிறிஸ்து நமக்காக பலியாகும் இடம். இப்படிப்பட்ட புனிதமான இடத்தை அணுகிவரும் போது நாம் விழிப்பாய், இறை அனுபவம் பெறுகிற வேட்கையோடும், ஆவலோடும் இருக்க வேண்டும். அதே வேளையில் நடமாடும் கோவில்களான சக மனிதர்களை அன்பு செய்யவும், மதிக்கவும், சரிசமமாக நடத்தவும் வேண்டும். கோவில்கள் வெறும் கட்டடங்கள் அல்ல, அவை உயிருள்ள கற்களால் ஆனவை. உயிர்ப்புடன் இருக்க நம்மை அழைப்பவை, உறவில் வாழ வைப்பவை. வழிபாடும் வாழ்வாகட்டும்

**அருட்பணி. ம. அலெக்சாண்டர்**
**இந்தியா**

காலத்தையும், இடத்தையும் கடந்து நிற்கும் இறைவன், திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் காலத்திற்குள்ளும், இடத்திற்குள்ளும் கடந்து வருவதால், இவை நடைபெறும் இடம் "திருக்கொண்டாட்டங்களுக்கு ஏற்றதாகவும், அணிசெய்யப்பெற்றதாகவும் இருக்க வேண்டும் வெறும் ஆடம்பரமல்ல, அழகே அதனை மாண்புறச் செய்ய வேண்டும். மேலுலகின் சின்னமாகவும் அடையாளமாகவும் அமைய வேண்டும்" (RDCA 3) எனவே, கோவிலை வெறுமனே நம்பிக்கையாளர் கூடிவர வசதியான இடம் என்று மட்டும் புரிந்து கொள்ளக்கூடாது. மக்கள் கூடிவரும் மற்ற இடங்களை விட இது முற்றிலும் மாறுபட்டது. மேற்குறிப்பிட்டபடி இது கடவுளின் வீடு, இயேசுவை மூலைக்கல்லாகவும், திருத்தூதர்களை அடித்தளமாகவும் கொண்டு கட்டப்பட்ட திரு அவை, புதிய எருசலேம்... என கோவிலின் மேன்மையை உணர்ந்திருக்க வேண்டும். அப்போது தான் திரையரங்கிற்கோ, வணிக வளாத்திற்கோ (Shopping Complex), பூங்காவிற்கோ செல்வது போல இராமல், சரியான மனநிலையுடனும், உடை நெறியுடனும்,(Dress Code) நன்னடத்தையுடனும் கோவிலில் நடைபெறும் வழிபாடுகளில் பங்கேற்க முடியும். "ஏனெனில் கோவிலில் தான் கிறிஸ்தவ சமூகம் திருக்கூட்டமாக ஒன்றிணைந்து இறைவாக்கைக் கேட்கிறது. ஒன்றாக இறைவேண்டல் புரிகிறது, அடையாளங்களைப் பெறுகிறது. திருப்பலியை கொண்டாடுகிறது." (RDCA 2)

கோவில் திரு அவையின் காணக்கூடிய அடையாளமாய் இருக்கிறது. திரு அவை என்பது திருமுழுக்குப் பெற்ற நம்பிக்கையாளர் கூடியிருக்கும் குழுமம். புனித சிப்ரியான் சொல்வது போல, "தந்தை, மகன், தூய ஆவியார் ஆகியோரிடையே உள்ள ஒற்றுமையோடு ஒன்றிணைந்த ஒரு மக்கள் குலமே" திரு அவை. (புனித சிப்ரியான், 'ஆண்டவர் கற்பித்த இறைவேண்டல்' 23) திரு அவையை நாம் ஒவ்வொருவருமே உயிருள்ள கற்களாக இருந்து கட்டியெழுப்புகிறோம். எனவே கோவில் ஒவ்வொரு கிறிஸ்தவ நம்பிக்கையாளருக்கும் அவரது தன்மையை உணர்த்துகிறது. தான் இறைவன் வாழும் கோவில் என்பதையும், நம்பிக்கையாளராகக் கூடிவரும் போது திரு அவை என்னும் கட்டடத்தின் உயிருள்ள ஒரு பகுதி என்பதையும் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் உணர வேண்டிய அழைப்பையும், வாழ வேண்டிய சவாலையும் கோவில் விடுக்கிறது. திருமுழுக்குப் பெற்றவர்கள் என்ற நிலையில் கோவிலில் அனைவரும் சரிசமம். எனவே இறை மக்களிடையே எந்த விதமான பாகுபாடோ, ஏற்றத்தாழ்வோ இல்லை.

கிறிஸ்தவத்தில் சாதிய பாகுபாடுகள் கண்டிப்பாக களையப்பட வேண்டும். சமத்துவம், சகோதரத்துவம் போதிக்கும் கோவில்களே முற்காலத்தில் பாகுபாடுகளை சகித்துக் கொண்டன என்பதையும் மறுக்க முடியாது.

## கிறிஸ்மஸ் சிந்தனைகள் - 4
## "தேடி வரும் இறைவன்"




மற்ற சமயத்திற்கும் கிறிஸ்தவ சமயத்திற்கும் உள்ள ஒரே வேறுபாடு என்னவென்றால், பிற சமயத்தில் தெய்வங்களைத் தேடி பக்தர்கள் செல்வார்கள். ஆனால் நம்மைத் தேடி நம் இறைவன் வந்தார். பாவம் செய்து ஒளிந்து கொண்டிருந்த ஆதாமை நோக்கி ஆதாம் நீ எங்கே இருக்கிறாய் என்று தேடியவர் தான் நம் கடவுள். தந்தையை விட்டு விலகிச் சென்ற பின்னும் தன் மகன் தன்னை நோக்கி வருவான் என வழிமேல் விழிவைத்துக் காக்கும் தந்தையின் அன்பை ஊதாரி மகன் உவமையின் வழியாய் விளக்குகிறார் இயேசு, காணாமல் போன ஆட்டை ஆயன் தேடுவதைப் போல, காணாமல் போன நாணயத்தை விளக்கேற்றி பெண்ணானவள் தேடுவதைப் போல இறைவன் நம்மைத் தேடுகிறார், மீட்பளிக்கிறார். இத்தகைய தந்தையின் அன்பைத் தான் சக்கரியாவும் தன் பாடலில் விளக்குகிறார். "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில் அவர் தம் மக்களைத் தேடி வந்து மீட்டருளினார். படைத்த கடவுள் நம்மைத் தேடி வந்தார். நாம் அவரைத் தேடுகிறோமா?...

"மிகவும் கடினமான விஷயங்களில் ஒன்று சமுதாயத்தை மாற்றுவது அல்ல...
மாறாக உங்களை மாற்றுவது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றை ஆக்கியோர் – 02



நெல்சன் மண்டேலா 1918ஆம் ஆண்டு யூலை மாதம் 18ஆம் திகதி தென்னாபிரிக்காவிலுள்ள குலு கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை சோசா பழங்குடி இன மக்கள் தலைவர் ஆவார். இவரின் முழுப்பெயர் 'நெல்சன் ரோபிசலா மண்டேலா' அந்தக் குடும்பத்தில் இருந்து முதல் முதலில் பள்ளிக்குச் சென்ற மண்டேலா இளம் வயதில் ஆடு, மாடு மேய்த்துக்கொண்டே பள்ளிக்கூடத்தில் படித்தார். அத்துடன் போர்புரியும் கலைகளையும் பயின்றார். கல்வியறிவைப் பெறுவதில் பெரிதும் நாட்டம் கொண்ட மண்டேலா லண்டன் மற்றும் தென்னாபிரிக்கா பல்கலைக்கழகங்களிலும் பட்டப்படிப்பை மேற்கொண்டார். 1941ஆம் அண்டு ஜோகானஸ்பேர்க் சென்று பகுதி நேரத்தில் சட்டக்கல்வி படித்தார். ஒரு தங்கச் சுரங்க பாதுகாப்பு அதிகாரியாகவும் தோட்ட முகவராகவும் பணியாற்றி வந்தார். தென்னாபிரிக்க நாட்டில் கறுப்பர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். அங்கு வெள்ளையர்கள் சிறுபான்மையினர். ஆயினும் ஆட்சிஅதிகாரம் வெள்ளையர்களிடமே இருந்தது.

1939ஆம் அண்டில் தனது 21 வயதில் கறுப்பின இளைஞர்களை ஒன்றிணைத்து "கறுப்பின மக்கள் அடக்கப்படுகின்றனர் அவர்களுக்கு வாக்களிக்கு உரிமை மறுக்கப்படுகின்றது. அவர்கள் பிரயாணம் செய்வதற்கு அவர்களுடைய நாட்டிலுள்ளேயே அனுமதி பெற வேண்டி உள்ளது. நிலவுடமையாளர்களாக கறுப்பின மக்கள் இருப்பது தடைசெய்யப்பட்டுள்ளது இவை சுதேச மக்களுக்கு எதிரானவை நீதியற்றவை இவற்றிற்கு எதிராக நாம் போராட வேண்டும்" என அறைகூவி கறுப்பின மக்களுக்காக சட்டஆலோசனைகளை வழங்கினார்.



இனவாதமும் ஒடுக்குமுறையும் அரசின் ஆதரவுடன் அரங்கேறுவதை அறிந்து கொண்ட மண்டேலா சீற்றம் கொண்டவராக அரசியலுக்குள் குதித்தார். கறுப்பினர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக உருவான "ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்" என்ற கட்சியின் முதன்மைப் பொறுப்பிற்கு வந்தார். அதன் தலைவரான நெல்சன் மண்டேலா இனவெறி பிடித்த வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் போராடினார். இவரது வன்முறையற்ற போராட்டம் வளர்ச்சியடைவதைக் கண்ட வெள்ளையர் 1956ல் அரசிற்கு எதிராகப் புரட்சி செய்தார் என கைது செய்து நான்கு ஆண்டுகள் விசாரணைக்குப் பிறகு சிறையில் இருந்து வெளிவந்தார்.

1961ல் இனவெறிக்கு எதிரான முதலாவது தாக்குதல் மண்டேலா தலைமையில் நடத்தப்பட்டது. இனவெறிக்கு எதிரான இவரது போர் நடவடிக்கைகள் மனித உரிமைகளை மீறுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இதனைக் காரணம் காட்டி அமெரிக்காவும் இவர் மீது பயங்கரவாத முத்திரைக் குத்தியது மண்டேலா அமெரிக்காவுக்குள் நுழைவதற்காக தடை, மண்டேலா உட்பட 10 முக்கிய ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது. வெள்ளை அரசுக்கு எதிராகப் புரட்சி செய்தமை, அமைதியைக் குலைத்தமை, கலகத்தை உருவாக்கியமை என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. 1962ல் சிறையில் அடைக்கப்பட்ட மண்டேலாவிற்கு 1964 யூன் 12ல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது அவருக்கு வயது 46 அன்று ஆரம்பிக்கப்பட்ட அவரது சிறைவாசம் 27 ஆண்டுகளாகத் தொடர்ந்தது. உலக வரலாற்றிலே மண்டேலாவை போல இவ்வளவு நீண்ட காலம் சிறையில் வாடிய தலைவர்கள் கிடையாது. பல ஆண்டுகள் அவரை தனிமைச் சிறையில் அடைத்து கொடுமை செய்தது தென்னாபிரிக்க அரசாங்கம்.

## நெல்சன் மண்டேலா

மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுவதும் எழுந்தது. மன்னிப்புக் கேட்டால் விடுதலை செய்கின்றோம் என்று தென்னாபிரிக்க அரசு ஆசை காட்டியது ஆனால் மண்டேலா தென்னாபிரிக்க ஆட்சியிடம் மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார். மாற்றம் ஏற்பட்டு புதிய அதிபர் பதவிக்கு வந்தார் அவர் மண்டேலாவை விடுதலை செய்ய முன்வந்தார். மண்டேலாவின் விடுதலை நாளை உலகமே ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தது. மண்டேலா தனது கோரிக்கைகள் தொடர்பாக டெக்ளார்க் அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு அவர்களிடம் இருந்து தனது பல கோரிக்கைகளைப் பெற்றுக் கொண்டார். தென்னாபிரிக்கா ஒரு மக்களாட்சி நாடாகப் பின்னர் மலர்வதற்கு இந்தப் பேச்சுவார்த்தை முக்கிய பங்கு வகித்தன. அப்போதைய தென்னாபிரிக்க அரசு "ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்" மீதான தடையை நீக்கி மண்டேலாவை 11.02.1990 அன்று விடுதலை செய்யப்படுவார் என்று அதிகாரப் பூர்வமாக அறிவித்தது. 1990ல் மண்டேலா சிறையில் இருந்து விடுதலை பெற்றார். விடுதலை பெற்ற போது அவருக்கு வயது 71

10.05.1994 மண்டேலா தென்னாபிரிக்காவின் அதிபர் ஆனார். தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு பதவி வகித்தபின் 1999ல் பதவியை விட்டு விலகினார். இவர் இரண்டாவது முறையாக பதவிக்கு போட்டியிட மறுத்துவிட்டார். உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் 5.12.2013 தனது 95வது அகவையில் காலமானார். தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாளான யூலை 18ம் திகதியை "சர்வதேச நெல்சன் மண்டேலா" தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. 1993ல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மண்டேலா 250ற்கு மேற்பட்ட விருதுகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# நல்ல சமாரித்தனும் நமக்கானசெய்திகளும்

A.S.K அற்புத அன்ரன் ராஜ்
மூதூர்

தொடர்ச்சி...

"உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச்செய்தால் நீங்கள் உங்கள் விண்ணகத்தந்தையின் மக்கள் ஆவீர்கள்" (மத்தேயு 5:44 – 45) என்கின்றார். ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே (மத்தேயு 7:12 மற்றும் லூக்கா 6:31) அதுவே பரிசுத்த வேதாகமத்தில் பொன்விதி என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நாம் முதலாவது தேவ அன்பை ருசிக்க அதிக கவனம் செலுத்தவேண்டும். அப்போது நம்முடைய அன்பு தாகம் தணிவதோடு பிறருடைய அன்புத்தாகத்தை தணிக்கவும் முடியும்.

பிறர் அன்பைவிளக்கும் ஒரு குட்டிக்கதை ஒருவர் நாயுடனும் குதிரையுடனும் போகும்போது மின்னலடித்து அவர் இறந்துவிட்டார். அவர் அறியாமலேயே சொர்க்கத்திற்கு திடீரென நாயுடனும் குதிரையுடனும் செல்கின்றார். அங்கு அவர் சென்றுகொண்டிருக்கும் போது ஓரிடத்தில் சொர்க்கம் என எழுதிய ஒரு பெயர்ப்பலகையை பார்த்தார் அதனருகில் நீர் நிரம்பிய ஒரு தண்ணீர்ப்பாத்திரமும் இருந்தது. அவருக்கும் தன்னோடுவரும் குதிரை மற்றும் நாய்க்கும் தாகமாயிருப்பதை உணர்ந்த அவர் அங்கிருந்த காவலாளியிடம் நான் இந்த நீரை அருந்தலாமா? எனக்கேட்டார். அதற்கு காவலாளி ஆமாம் தாராளமாக அருந்தலாம் என்றார். அப்படியானால் எனது குதிரை அருந்தலாமா எனக்கேட்க காவலாளியோ இல்லை இதை மனிதர்கள் மட்டுமே அருந்தலாம் என்றார். பின்னர் அவர் அப்படியானால் நாய் அருந்தலாமா எனக்கேட்க குதிரைக்கே முடியாது என்றுசொல்லிவிட்டேன் பின்னர் எப்படி நாய்க்கு நீங்கள் கேட்பீர்கள் என்றான் காவலாளி அதற்கு இவரோ நாய்க்கும் குதிரைக்கும் இல்லையெனும் போது எனக்கும் இது வேண்டாம் என்று கூறிவிட்டு காவலாளியிடம் இந்த இடத்தின் பெயரென்ன எனக்கேட்கின்றார். அதற்கு அவனோ இது சொர்க்கம் என்றான்.



சொர்க்கத்திலேயே என்னுடன் வந்தவர்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் இப்படியொரு சொர்க்கமே எனக்கு வேண்டாம் என்று கூறிவிட்டு குதிரையுடனும் நாயுடனும் சற்று தூரம் நடந்தார். மறுபடியும் சொர்க்கமென்று இன்னுமொரு இடம் வந்தது. அங்கும் முன்பிருந்தது போலவே காவலாளி, நீர் நிரம்பிய பாத்திரம் இருந்தது. அவர் அங்கு சென்று காவலாளியிடம் "நான் இந்த நீரை அருந்தலாமா?" எனக்கேட்டார். அதற்கு காவலாளி "ஆமாம் தாராளமாக அருந்தலாம்" என்றார். அப்படியானால் எனது குதிரை அருந்தலாமா எனக்கேட்டார். காவலாளியோ ஆமாம் தாராளமாக என்றார். மீண்டும் இவர் அப்படியென்றால் நாய் எனக்கேட்க காவலாளியும் தாராளமாக இதை அருந்தலாம் என்றார். பின்னர் அவர் காவலாளியிடம் இந்த இடத்திற்கு பெயரென்ன என்று வினவ அவரும் "இது நிஜமான சொர்க்கம்" என்றார். அப்படியானால் முன்பிருந்த இடமும் சொர்க்கம் என்றுதானே இருந்தது என்று இவர் சொல்ல காவலாளியோ "அது உங்களை பரிசீலிப்பதற்காக கடவுள் ஏற்பாடு செய்திருந்த இடம். அது நரகம் நீ மட்டும் உன் நாயையும் குதிரையையும் தவிக்கவிட்டு அங்கு நீர் அருந்தியிருந்தால் கடவுள் உன்னைத்தூக்கி உள்ளே போட்டிருப்பார்" என்றார். மற்றவர்களை கவனிக்காமல் நமது தேவைகளை மட்டும் நிறைவேற்றுபவர்களை கடவுளும் கவனிப்பதில்லை.

இயேசு கால்களை கழுவும் சடங்கின்போது ஒரு வேலைக்காரனைப்போல் ஒரு சிறு துண்டை இடுப்பில் அணிந்துகொண்டு தம் சீடர்களின் பாதங்களை கழுவினார். பெரும்பாலும் வேலைக்காரர்கள் தங்கள் எஜமானியர்களின் பாதங்களை கழுவுவது அப்போது வழமையாக இருந்தது. "ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள் காலடிகளை கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக்கழுவ கடமைப்பட்டிருக்கின்றீர்கள். நான் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்" (யோவான் 13:14) என அழகாக இயேசு அன்பு பணி புரிய தம் சீடர்களுக்கு செயல்வடிவிலான முன் உதாரணம் கொடுத்தார். மத்தேயு 25: 35 – 40 வரையிலான வசனங்களில் இயேசு அழகாகக் கூறுகிறார். "ஏனெனில் நான் பசியாய் இருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள். அந்நியனாய் இருந்தேன் என்னை ஏற்றுக்கொண்டீர்கள். ஆடையின்றி இருந்தேன் நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள் நோயுற்றிருந்தேன் என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன் என்னைத்தேடி வந்தீர்கள் என்பார்." அதற்கு நேர்மையாளர் எப்போது இவற்றையெல்லாம் செய்தோம் என்று வினவ "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன்" எனப்பதிலளித்தார். பிறருக்கு நாம் துணிந்து செய்யும் செயல்கள் அனைத்தும் நம்மை நிமிர்த்தும் வல்லமை கொண்டவை அதுவே அன்பின் மகத்துவம்.

"சிரமங்கள் சிலரை ... உருவாக்குகின்றது!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களை வைத்து இறைவார்த்தையை கண்டுபிடித்தல்

- எல்லாரும் பங்குபற்றலாம்
- புனித லூக்கா நற்செய்தியை மையமாகக் கொண்டது
- சொற்களிலுள்ள இறைவார்த்தையைக் கண்டு பிடித்து அதிகாரம் வசனத்தை எழுதுக.
- போட்டோபிரதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
- தெரிவு குலுக்கல் மூலம் இடம் பெறும்
- பரிசுகள்1ம் பரிசு - 500/- ,2ம் பரிசு - 300/- ,3ம் பரிசு - 200/-

1. மரியா, நான் யார்?, வாழ்த்தை, மகிழ்ச்சியால், என், துள்ளிற்று, என்னிடம், ஆண்டவரின், வாழ்த்தினர், தாய், குரலில், வர

விடை ........................................

2. மறுமொழியாக, பொய்க்குற்றம், எவரையும், யார்மீதும், கூட்டத்தினர், சுமத்தாதீர்கள், நற்செய்தியை, அறிவித்தார்.

விடை ........................................

3. பாவமன்னிப்பு, வழியை, முழங்குகிறது, ஆண்டவருக்காக, திருமுழுக்கு, ஆயத்தமாக்குங்கள், பெறுங்கள்.

விடை ........................................

4. கதிரவனிலும், மன்றாடுங்கள், எச்சரிக்கையாய், எப்பொழுதும், நிகழப்போகும், மானிடமகன், விழிப்பாயிருந்து, தீரும்.

விடை ........................................

5. எத்தகையதோ, அருள்மிகப், கலங்கி, மரியா, வாழ்க, கடவுளின், பெற்றவரே.

விடை ........................................

6. ஆயத்தமாய், நினையாத, நீங்களும், மானிடமகன், இருங்கள், நேரத்தில்

விடை ........................................

7. குழப்பம், நெருங்கி, அச்சத்தினால், அதிரும், மீட்பு, மாட்சியோடும், உங்கள், மேகங்கள், வருகின்றது.

விடை ........................................

8. அங்கலாய்ப்பீர்கள், கடைசியாவர், பந்தியில், அமர்வார்கள், புறம்பே, முதன்மையானோர்.

விடை ........................................

9. நானே அவர், நீங்கள், காலம், நெருங்கி, பார்த்துக், கூறுவார்கள், ஏமாறாதவாறு, கொள்ளுங்கள்.

விடை ........................................

10. ஓய்ந்தன, நம்பிக்கை, வியப்பும், உங்கள், விழித்தெழுந்து, எங்கே?, அமைதி

விடை ........................................

11. தாழ்த்துவோர், அமருங்கள், தாமே, யாவரும், தம்மைத், உயர்த்துவோர், பந்தியில், உயர்த்தப்பெறுவர்.

விடை ........................................

12. விரைவாய், நான், இறங்கி, அண்ணாந்து, இன்று, இயேசு, உமது, மகிழ்ச்சியோடு, வீட்டில், இடத்திற்கு, தங்கவேண்டும்.

விடை ........................................

பெயர் :........................................

முகவரி:........................................

பங்கு :........................................

முடிவுத்திகதி

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 48 திருப்பாடல் 31 – 60

1. கடவுளின் துணையால் எப்படி போராட வேண்டும்?

விடை ........................................

2. ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோரை என்ன சூழ்ந்து நிற்கும்?

விடை ........................................

3. ஒருவர் எதிலே நிலைத்து இருக்க முடியும்?

விடை ........................................

4. யார் தம் உள்ளத்தில் கடவுள் இல்லை என்று சொல்லிக் கொள்கின்றனர்?

விடை ........................................

5. ஏழை கூவி அழைத்தான், ஆண்டவர் என்ன செய்தார்?

விடை ........................................

6. ஆண்டவர் தம் பேரன்பை எப்போது பொழிகின்றார்?

விடை ........................................

7. தீயோரை எது சாகடிக்கும்?

விடை ........................................

8. பொல்லார் நேர்மையாளருக்கு எதிராக என்ன திட்டமிடுகின்றனர்?

விடை ........................................

9. பொல்லார் எப்போது நெறிதவறிச் செல்கின்றனர்?

விடை ........................................

10. யாருடைய கடவுள் நமக்கு அரண்?

விடை ........................................

11. இறுமாப்புடன் பேசும் நா யாருக்கு எதிராக கட்டுண்டு கிடக்கும்?

விடை ........................................

12. எந்த மலை அனைத்து உலகிற்கும் மகிழ்ச்சியாய் இலங்குகின்றது?

விடை ........................................

13. எவனது மனத்தில் வஞ்சகம் இல்லையோ அவர் எப்படிப்பட்டவர்?

விடை ........................................

14. ஆண்டவருடைய வாக்கினால் என்ன உண்டானது?

விடை ........................................

15. நீதிமான்கள் மன்றாடும் போது ஆண்டவர் என்ன செய்கிறார்?

விடை ........................................

பெயர் :........................................

முகவரி:........................................

பங்கு :........................................

முடிவுத்திகதி

"செய்து முடிக்கும் வரை எதுவும் முடியாதது போல தான் இருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி நிறந்தீட்டுதல்



பெயர் :..................
முகவரி :..................
தரம் :..................
பங்கு :..................
முடிவுத்திகதி

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/- 2ம் பரிசு - 300/- 3ம் பரிசு - 200/-

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்



**பங்குபற்றியவர்கள் : 02 பேர்**
**பரிசுத்தொகை இருவருக்கும் சமமாகப் பங்கிடப்படுகிறது.**

500/= ரூபா
ச.கி. செரிக் மாசல்
இல: 35, ஹெம்பேக்கர் வீதி
பாலையூற்று

500/= ரூபா
யோ. டிவேஞ்சன்
இல: 676, அன்புவழிபுரம்
திருகோணமலை



## புனித மாற்கு நற்செய்தி அதிகாரம் 3 – 4 போட்டி முடிவுகள்



**பங்குபற்றியவர்கள் : 09 பேர்**
**மிகச் சரியாக விடையளித்தோர் : 02 பேர்**
**பரிசுத்தொகை இருவருக்கும் சமமாகப் பங்கிடப்படுகிறது.**

500/= ரூபா
R.J எமில்ராஜ்
இல: 48, நித்தியபுரி
3ம் கட்டை
செல்வநாயகபுரம்

500/= ரூபா
ச.கி சேன்·செவோன்
இல: 35, ஹெம்பேக்கர் வீதி
பாலையூற்று



## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர்போட்டி – 45 யோபு 21 – 31 அதிகாரம் போட்டி முடிவுகள்



**பங்குபற்றியவர்கள் : 06 பேர்**
**மிகச் சரியாக விடையளித்தோர் : 02 பேர்**
**பரிசுத்தொகை இருவருக்கும் சமமாகப் பங்கிடப்படுகிறது.**

500/= ரூபா
தனராஜா மிஷேல்
இல: 427, அன்புவழிபுரம்
திருகோணமலை

500/= ரூபா
இ. ஜெசானியா
இல: 30, சுங்க வீதி
திருகோணமலை

**பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றியும்**

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 39 லூக்கா நற்செய்தி ( 1 – 2 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நே | | | | | | | | வா | ■ |
| ■ | | வ | | | | | பெ | | |
| ■ | | | | க | | | | | |
| ■ | | | | ■ | | | யூ | | ம |
| | | | | யோ | | | | | |
| | | | | ■ | | | | அ | |
| | அ | | நா | | | | | ம | |
| | ■ | | | | | | | நி | |
| த | | | | | | | | செ | |
| தீ | | | | | | | ■ | ■ | இ |

01. நே ___ மை ___ ள ர்
02. வா ___ தூ ___ ர்
03. யோ ___ ___ பு
04. அ ___ ___ ணை
05. நி ___ ழ ___ டு ___
06. யூ ___ ___
07. செ ___ ___ ப்ப ___ த்த
08. அ ___ ஸ் ___ சீ ___ ர்
09. வ ___ ம ___ பி ___ ர்
10. ம ___ யா
11. க ___ லே ___
12. நா ___ ___ த்து
13. பெ ___ ல ___ ம்
14. த ___ ம ___ ன்
15. தீ ___ ன ___ தொ ___ டி
16. இ ___ ய ___ ___ ள்
17. ம ___ ழ் ___ சி

பெயர் :..................
முகவரி:..................
பங்கு :..................
முடிவுத்திகதி

"நான் தோற்பதே இல்லை. ஒன்று வெற்றி பெறுகின்றேன் அல்லது கற்றுக்கொள்கிறேன்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரோதயநகர் புனித மடுமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா 2021.

வரோதயநகர் புனித மடுமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா 2021. மார்கழி மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி. S. மதுராங்கன் குருஸ் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகள் மார்கழி 5 காலை அருட்பணி. XI. ரஜீவா அடிகளாரின் தலைமையிலான திருவிழாக் கூட்டுத்திருப்பலியுடன் இனிதே நிறைவுற்றது.



## திருகோணமலை மறைமாவட்டத்தில் திருவருட்சாதன கொண்டாட்ட நிகழ்வுகள் - 2021

கொவிட் - 19 பெருந்தொற்று நோய்ப்பரம்பலின் காரணமாக பிற்போடப்பட்டிருந்த திருவருட்சாதனங்கள் வழங்கும் நிகழ்வுகள் தற்போது நிகழும் சுமூகமான சூழ்நிலையில் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் சிறப்பாக நடந்தேறின. உறுதிப்பூசுதல் மற்றும் திவ்வியநற்கருணை திருவருட்சாதனங்களைப் பிள்ளைகள் மிகுந்த ஆர்வத்தோடும் மகிழ்வோடும் பெற்றுக்கொண்டனர்.

**04.12.2021 திவ்வியநற்கருணை மற்றும் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனங்கள்**
**புனித லூர்த்து மாதா திருத்தலம் - பாலையூற்று**





**04.12.2021 திவ்வியநற்கருணை திருவருட்சாதனம்**
**புனித மரியாள் பேராலயம் - திருகோணமலை**





**03.12.2021 திவ்வியநற்கருணை மற்றும் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனங்கள்,**
**புனித பிரான்சிஸ்சவேரியார் ஆலயம் - கும்புறுபிட்டி**





## புனித சதாசகாய அன்னை ஆலய வருடாந்த ஒளிவிழா 2021 (அன்புவழிபுரம்)

மறைப்பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வானது 12.12.2021 காலை திருப்பலியின் பின்னர் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மறைப்பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், ஆலய வளாகத்தை அண்டிய பகுதியில் வசித்து வரும் இந்து சமயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வகுப்பு ரீதியாக பரிசில்கள் வழங்கப்பட்டது சிறப்பம்சமாகும். அத்தோடு தேசிய கல்வியியல் கல்லூரி, வவுனியா கிறிஸ்தவ பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவியும் கௌரவிக்கப்பட்டார். மேற்படி நிகழ்விற்கு எமது மறைமாவட்டத்தின் மறைக்கல்வி நடுநிலையத்தின் இயக்குனர் அருட்பணி S.டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளார் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்தார்.




## 2022ம் ஆண்டிற்கான புதிய திருவழிபாட்டு நாட்காட்டி

2022ம் ஆண்டிற்கான திருகோணமலை மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி (CALENDER) விற்பனைக்கு தயாராக உள்ளது. பெற்றுக்கொள்ள விரும்புவோர் உங்கள் பங்குத்தந்தையை தொடர்பு கொள்ளவும்.








BEN VISION PRINTERS, TRINCOMALEE 076 9000035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org